விலை ரூபா 1·25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 புரட்டாதி 27 ஸபர் 8 இதழ் 245

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 13-10-1986

## வடபகுதி மக்கள் வங்கி கிளைகளின் 70 பாதுகாப்பு ஊழியர்கள் திடீர் வேலை நீக்கம்!

[அலுவலக நிருபர்]

இலங்கைமக்கள் வங்கியின் வடபகுதிக்கிளைகளில் கடமையாற்றிவந்த 70 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் திடீரென வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை இராணுவப்பிரிவிலும் பொலிஸ் உத்தியோகத்தர்களாகவும் முன்பு கடமையாற்றிய இந்த உத்தியோகத்தர்கள் 3 வருடங்களுக்கு முன்னர், தமது நிரந்தரவேலையை இராஜினமா செய்துவிட்டு வடபகுதி மக்கள் வங்கிக்கிளை அலுவலகங்களில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றத் தொடங்கினர்.

அண்மைக்காலங்களாக வடபகுதி மக்கள் வங்கிக்கிளைகளில் நகைகள் அடகுவைத்தோர் சங்கத்தினர், தமது நகைகளை மீளளிக்குமாறு கோரி நடத்திய போராட்டங்களின் விளைவாக

[5ம் பக்கம் பார்க்க]

● அடம்பனில் இராணுவம்-போராளிகள் கடும் மோதல்:

# மன்னார்பகுதி 'புலிகள்' இயக்க தளபதி 'விக்ரர்' மரணம்!

(நமது நிருபர்)

**மன்னாரில் அடம்பன் கிராமத்தில் நேற்று இராணுவத்தினருக்கும், தமிழீழவிடுதலைப்புலிகளுக்குமிடையே கடும்மோதல் இடம்பெற்றது இதில் மேற்படி இயக்கத்தின் மன்னார்ப் பகுதி பொறுப்பாளர் 'விக்ரர்' பலியானார். இராணுவத்தின் தரப்பில் ஹெலிகொப்டர் விமானி ஒருவர் உட்பட சிப்பாய்கள் பலரும் இம் மோதலில் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

நேற்று அதிகாலை தொடக்கம் இக்கடும்மோதல் இடம்பெற்றுக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதுசம்பந்தமாக விடுதலைப் புலிகள் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"நேற்றுமுன்தினம் இரவோடிரவாகத் தள்ளாடி முகாமிலிருந்து நடந்துவந்த 200க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் நேற்று அதிகாலையளவில் அடம்பனை முற்றுகையிட முயன்றசமயம் விடுதலைப்புலிப் படையின் செரில்லா அணியினர் இராணுவத்தினரை அடம்பன் அரசாங்க பாடசாலையடியிலும், தேவாலயத்திற்கு அருகில் வைத்தும் சுற்றிவளைத்துத் தாக்குதல் மேற்கொள்ளத் தொடங்கினர். இராணுவத்திற்கு உதவியாக இரு ஹெலிகொப்டர்களும் வானில் வட்டமிட்டு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டன. இரண்டு குண்டுவீச்சு விமானங்களும் குண்டுகளைப் பொழிந்து தாக்குதலை நடத்தின. இவற்றுக்கு எதிராகவும் புலிப்படையினர் தாக்குதல் நடாத்தினர்.

"நேற்றுப் பிற்பகலளவில் தாக்குதலைத் தொடர்ந்து இராணுவத்தினர் நெருங்கண்டலுககுப் பின்வாங்கனர் அங்கும் புலிப்படையினர் சுற்றிவளைத்துத் தாக்குதல் நடாத்தினர். இதன்போது பல

(5-ம் பக்கம் பார்க்க)

## தொலைபேசி சீரில்லை

யாழ். திங்கள்

யாழ். நகருக்கும் வெளியிடங்களுக்குமான தொலைபேசிசேவை நேற்று சீரற்ற

[5ம் பக்கம் பார்க்க]

வாழைச்சேனையில்

## ஜீப் வண்டிமீது தாக்குதல் இரு பொலிஸார் பலி!

யாழ்ப்பாணம், திங்கள்

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் நிலையத்திலிருந்து இரு ஜீப்வண்டிகளில் புறப்பட்ட பொலிஸாரை நோக்கி தமிழீழ விடுதலைப்புலிப்படையின கெரில்லா அணியினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் இரு பொலிஸார் கொல்லப்பட்டனர் மீதிப்பேர் படுகாயமுற்றனர்.

நேற்றுக் காலை இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவம் குறித்து விடுதலைப்புலிகள் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

[5-ம் பக்கம் பார்க்க]

## இந்திய பிரமுகர்கள் பேர்னட் சந்திப்பு

புதுடில்லி, ஞாயிறு

இந்திய மத்திய இணை அமைச்சர் திரு ப. சிதம்பரத்தை இந்தியாவிற்கான இலங்கை உயர் ஸ்தானிகர் திரு. பேர்னட் திலகரட்ன நேற்று புதுடில்லியில் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

இச்சந்திப்பின்போது இனப்பிரச்னை தீர்வுகுறித்து அண்மைக்காலங்களில் இந்தியா மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இதேவேளை திரு திலகரட்ன இந்திய வெளியுறவுச்செயலர் திரு வெங்கடேஸ்வரனை கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ரா)

## 'புளொட்' உறுப்பினருக்கு 18 மாத சிறைத்தண்டனை

கொழும்பு ஞாயிறு.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தைச் சேர்ந்த (புளொட்) ஆர். விஜயராஜா என்பவருக்கு 18 மாதகால கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இரு குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக இவர் மீது வழக்குத் தாக்கல்செய்யப்பட்டிருந்தது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி டபிள்யூ ஜி என். வீரரட்ண விசாரணை முடிவில் விஜயராஜாவுக்கு மேற்குறிப்பிட்ட தண்டனையை வழங்கினார்.

சந்தேக நபர்களான கிருஷ்ணபிள்ளை, ஜெகன், சபீஷ் ஆகியோர் தொடர்பான தகவல்களை விஜயராஜா வைத்திருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

சட்டத்தரணி குமார் பொன்னம்பலம் தலைமையிலான சட்டத்தரணிகள் குழு விஜயராஜா சார்பில் ஆஜராகியிருந்தது.

விரைவில்

## க.பொ.த. உயர்தர பெறுபேறுகள்

கொழும்பு ஞாயிறு

கடந்த ஆகஸ்ட மாதம் நடைபெற்ற க. பொ. த [உயர்தர] பரீட்சையின் பெறுபேறுகள் அடுத்தமாத நடுப்பகுதியளவில் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பரீட்சைக்கு ஒருலட்சத்து 20ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர். [ஊ]

கொழும்பு-தூத்துக்குடி

## கப்பல் சேவைக்கு ஜப்பான் நிறுவனம் விண்ணப்பம்!

கொழும்பு, ஞாயிறு

கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் இடையிலான பிரயாணிகள் கப்பல் சேவையை நடத்த ஜப்பானிய நிறுவனமொன்று விண்ணப்பித்துள்ளது வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக் குழுவுக்கு இவ்விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஏர்கண்டிஷன் பொருத்தப்பட்ட, 600 பயணிகள் பிரயாணம் செய்யக்கூடிய கப்பலொன்றை இதற்காக பயன்படுத்த இந்நிறுவனம் முன்வந்

[8ம் பக்கம் பார்க்க]

ரூபவாஹினியின் வடபகுதி

## அஞ்சல் கோளாறுகள் திருத்தப்பட்டன!

கொழும்பு, ஞாயிறு.

கொக்காவில், மடுகந்த ஆகிய இடங்களிலுள்ள இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் அஞ்சல் நிலையங்களில் காணப்பட்ட பல கோளாறுகள் கடந்த வாரம் திருத்தப்பட்டுள்ளன.

கொக்காவில் அஞ்சல் நிலையத்துக்கு வந்த ரூபவாகினி கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த இரு பொறியியலாளர்கள் கடந்த மாதம் 20ம் திகதி இத்திருத்தவேலைகளை மேற்கொண்டனர்.

நிலையத்தின் மின்னிணைப்புத் தொகுதியிலும், மாற்று ஜெனரேற்றரிலுமே இத்திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகிறது. மேற்படி பொறியியலாளர் குழு கடந்த புதன்கிழமை கொழும்பு திரும்பியது.

இதேவேளை வவுனியாவிலிருந்து 4 மைல் தொலைவிலுள்ள மடுகந்த அஞ்சல் நிலையத்தின் மின்வழங்கல் தொகுதியில் ஏற்பட்ட கோளாறுகளும் திருத்தப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

(5ம் பக்கம் பார்க்க)

## பூஸாவில் தமிழ் கைதிகளை லலித் பார்வையிட்டார்

கொழும்பு, ஞாயிறு

தேசியபந்தோபஸ்து அமைச்சர் லலித்அத்துலத்முதலி இன்று காலி பூஸாமுகாமுக்கு விஜயம் செய்து அங்குதடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர், யுவதிகளைப்பார்வையிட்டார்.

தடுப்புக் கைதிகளுக்கு நல்ல மருத்துவ சேவைகள் வழங்கப்படுமென அமைச்சர் அங்கு தெரிவித்துள்ளார். அத்துடன் இவர்கள் மீது குற்றச்சாட்டு இருப்பின் சட்டமா அதிபர் திணைக்களம் சட்ட நடவடிக்கை எடுக்குமெனவும், சிறு குற்றம்புரிந்தவர்கள் பெலவத்தையிலுள்ள பயிற்சி நிலையத்துக்கு அனுப்பப்பட்டுபல்வேறு துறைகளில் பயிற்றுவிக்கப்படுவார்கள் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

கடமையின்போது

## காயப்படும் அரச ஊழியருக்கு நஷ்ட ஈடு!

கொழும்பு, ஞாயிறு

கடமையிலிருக்கும்போது காயமடையும் அரச ஊழியருக்கு நஷ்டஈடு வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

காயங்களின் விளைவினால் அரச ஊழியர் ஒருவர் மரணமடைந்தால் அல்லது முற்றாக ஆற்றல் இழப்புக்குள்ளானால் அவரது 60மாதங்களுக்கான சம்பளத்தொகை அவரைத் தங்கிவாழ்வோருக்கு வழங்கப்படும். அத்துடன் வைத்திய ஆலோசனைக்கேற்ப அவருக்கு லீவும் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ரோசாச் செடிகளுக்கேற்ற விஷேச ''ரோசா உரம்'' விற்பனைக்குண்டு M G.M and Stores, 781 K K S Road and, 208. 1st Cross st. Jaffna, T.P.22611 (C 5072)

சென்னந் தும்பு அடிக்கும் பெசின் உடன் விற்பனைக்குண்டு. 119, பிறவுண் றோட், யாழ்ப்பாணம். (C 5174)

சாவகச்சேரி கல்வயலில் சகல பிரயோசனங்களும், மின்சார வசதியும் கூடிய 12½ பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. விபரம்: க. சிவசிதம்பரம் 16/7, கலட்டி அம்மன் கோவிலடி, சீனியர்லேன், யாழ்ப்பாணம். (C-5034)

75 இனத்திற்கு மேற்பட்ட குறோட்டன்கன்றுகள் பொலிதீன், பைகளிலும், சாடிகளுடனும் விற்பனைக்குண்டு 78/2, New No 152/2, கோவில்வீதி, யாழ்ப்பாணம். (C 5153)

மைசூர் அரிசி நம்பர் 1. கல்லில்லாதது. சுத்தமானது தரமானது, சுவையானதும் கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது உங்கள் சகல தேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும். மைசூர் அரிசியையே கேட்டுவாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். மைசூர் அரிசி ஆலை, புனித அன்னம்மாள் கோவில்வீதி, மானிப்பாய். [C-5042]

Booking for Golden Comets Cockerels சிவப்பு சேவற்குஞ்சுகள் நவம்பர் 7ம் திகதி விநியோகிக்கப்படும். உடன் பதிவுசெய்யவும் Nallur Farm Centre, நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர்லேன், நல்லூர். (C 5170)

தேக்கு அல்மாரி, கட்டில்கள், Foam மெத்தைகள், Show case, Formica சாப்பாட்டுமேசைகள், Baby cot, Dinner set, கிளாஸ், பீக்கான், சில்வர், Sanyo 5 Speaker கசற் றேடியோ, Box Speakers, National T. V கசற் றேடியோவுடன், பெல்ஜியம் முகம் பார்க்கும் கண்ணாடிகள், Singer மெஷின், மற்றும் பல உடன் விற்பனைக்கு 326, பிரதானவீதி, யாழ்ப்பாணம், St. Charles பாடசாலை அருகில். (C-5141)

## தேவை

இரும்புக் கடைச்சல் வேலைக்கு [Lathe man] ஆள் தேவை. திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். காலை 9 மணிக்கும் மாலை 5 மணிக்குமிடையில் நேரில் வரவும். பென்ரகன் எஞ்ஜினியேர்ஸ்and கொன்றக்ரேஸ 271, கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர் (Pentagun Engineers and Contractors Private Ltd.) (C 5175)

பிரயாண முகவர் நிலையமொன்றுக்கு பெண் வரவேற்பாளர்கள் தேவை. ஆங்கிலம் சரளமாகப் பேசுபவராயும், சுருக்கெழுத்து, தட்டெழுத்து செய்வதில் கல்விச் சான்றிதழ்களும் பெற்றுள்ளவரும், வயது 22 30 வரை இருப்பதும் விரும்பத்தக்கது. விண்ணப்ப முடிவு திகதி 20-10-86 விளம்பர இல A-1455 மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். [A-1455]

## வாடகைக்கு

இருபாலைச்சந்தி - கோண்டாவில் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய ஹோட்டல் வாடகைக்கு அல்லது கொமிஷன் அடிப்படையில் கொடுப்பதற்குண்டு. தொடர்பு: த. சிவபாதம், கோண்டாவில் வீதி, இருபாலை, கோப்பாய். C-5062

## வகுப்புகள்

பயிற்சிபெற்ற ஆங்கில ஆசிரியரினால் 4ம் ஆண்டிலிருந்து 9ம் ஆண்டு வரையிலான ஆங்கில வகுப்புகளுக்கு உடனடியாகப் புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். தொடர்புகளுக்கு; 11, அரசடி ஒழுங்கை, வண்ணார்பண்ணை. (C 5051)

Home Science Diploma Course, Montessori Diploma Teachers Training Course, New batches 87, ஜனவரி 87-ல்ஆரம்பமாகும். 3-10-86 க்கு முன் நேரில் விண்ணப்பப்படிவத்தை பெற்றுக் கொள்ளவும்- அதிபர், உயர் கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். C-5096

G.S Q; (Bio), B.Sc (Bio) Chemistry, Botany, Zoology) G. A. Q and B A. (Arts) நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. G S Q, and B Sc. (Bio) G S Q. B Sc. (Maths (Pure, Applied, Statistics or Physics, Chemistry) New batches 87/88 ஜனவரி 87 முதல் வாரத்தில ஆரம்பமாகவுள்ளன 31-10-86 க்கு முன் நேரில் விண்ணப்பப் படிவத்தை பெற்றுக் கொள்ளவும் அதிபர், உயர்கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். C-5095

மோட்டர் வைண்டிங், வயறிங் City and Guilds பயிற்சிகள் 15-10-86 ஆரம்பம் இன்னும் சில வெற்றிடங்களே உள்ளன. Omega, Manipay Road, Jaffna. (ஈழநாட்டிற்கு எதிரில்) C-5132

88ம் ஆண்டிற்கான G.A.Q வெளிவாரி பட்டப்படிப்புகள் ஆரம்பமாகிவிட்டன பல்கலைக்கழக பதிவுகளைப் பெற விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி S. அருள்நங்கை, உயர்கலைக் கல்லூரி, 73, ஆனைப்பந்தியடி, யாழ்ப்பாணம். [A 1424]

Spoken English புதிய பிரிவு தூர இடங்களில் இருந்து வருபவருக்காக பகல் நேர இரு மணித்தியால வகுப்பு வாரத்தில் இரு நாட்கள். ஆரம்பம் 16-10-86. நேரம்: காலை 9-11 மணி வரை. 12, வைமன் வீதி, நல்லூர். S.B.Iyar. (C 5182)

T V Radio Electronic Engineering. மோட்டர் வைண்டிங் மோட்டர்மெக்கானிசம், வெல்டிங், வயறிங், தட்டெழுத்து - சுருக்கெழுத்து பிரிவுகள் 18-10-86 ஆரம்பமாகவுள்ளன விரும்பியோர் தொடர்பு கொள்க. Vispa Engineering Aid Hall, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [C-5184]

## சேவை

பழைய குளிர்சாதனப் பெட்டிகள் புதிய குளிர்சாதனப் பெட்டிகள் எம்மால் வேண்ட, விற்கப்படும். எம்மால் சீர் அமைக்கப்பட்டு உத்தரவாதத்துடன் தரும் சேவையை ஆரம்பித்துள்ளோம். பென்குவின் எயர்கொன் என்ஜினியர்ஸ், A.B.சபாநாதன் and C கோபாலரத்தினம், 14, மணல்தரை லேன், கந்தர் மடம். (C 5167)

## மணப்பந்தல்

36 வயதுடைய மாதம் 1000/- மேல் வருமானமுடைய லிகிதர்தொழில் புரியும்நளவர் இனத்தைச் சேர்ந்த கிறிஸ்தவ பெண்ணுக்கு மணமகன் தேவை. சகாயர் திருமண சேவை, புதுவாழ்வு நிலையம், கூளாவடி - ஆனைக்கோட்டை. (C 5165)

யாழ்ப்பாணம் உயர் சைவ வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த 27 வயதுடைய ஆயிலியம் நட்சத்திரமுடைய லண்டனில் கணக்காளராகப் பணியாற்றும் பெண்ணுக்கு மணமகன் தேவை. லண்டனில் பணியாற்றுவோர் சாதகக் குறிப்போடு விண்ணப்பிக்கவும் சீதனம் கொடுக்கப்படும். விபரங்களுக்கு: விளம்பர இல. C 5169' C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 5169)

GRATEFUL THANKS
to
JESUS CHRIST,
MOTHER MARY
and
HOLY ST. JUDE
for FAVOURS
GRANTED;

**M. Y. J.**

(C-5143)

## ஓராண்டு நினைவஞ்சலி



ஓவசியர் நமசிவாயம் தர்மலிங்கம்

மலர்வு:- 23-12-1926
உதிர்வு:- 24-09-1985

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எங்களை நேர்மையுடனும் அன்புடனும் காத்து ஈசனடி சேர்ந்தாலும் என்றென்றும் எம் இதயத்தை விட்டகலாத உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
கேணிக்கரை, அளவெட்டி.

[C-5105]

## உ
## தசாக அழைப்பும் நன்றி நவிலலும்,



திருமதி பாக்கியலெட்சுமி அம்மா சதாசிவக் குருக்கள்

தசாகம்:- 15-10-86 புதன்கிழமை காலை 9-00 மணிக்கு

நிகழும் அக்ஷய வருடம் புரட்டாதி மாதம் 20-ம் திகதி திங்கட்கிழமை (06-10-86) அதிகாலை சிவபதமடைந்த திருமதி சதாசிவக்குருக்கள் பாக்கியலெட்சுமி அம்மா அவர்களது இறுதிக்கிரியைகளில் பங்குபற்றி எமது துயரத்தில் பங்கு கொண்டு ஆறுதல் அளித்தவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மசாந்திக்காக நடைபெறவிருக்கும் கிரியைகளிலும் பங்கு பற்றிப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

அன்புக்கொரு தெய்வம் தாயே அன்பினில் அமுதம் ஊட்டுவாய் நீயே இன்னல் வந்துற்றபோதும் இன்முகம்காட்டி இனிதேபேசி இன்பமளித்தாயே வந்தவர்க்கெல்லாம் வாரி வழங்கி இல்லையென்னாது இனிதே வாழவைத்தாயே குன்றின் விளக்கனைய குலமகளாய் வந்துதித்து குலப் பெருமை தந்திட்ட குல விளக்கே அஷ்டலெட்சுமியின் அவதாரமாம் நீயே. அனைத்து செல்வமும் அளித்தாய் தாயே பண்பின் சிகரமாய், பாசத்தின் பிறப்பிடமாய் பாரினில் வாழ்ந்திட்ட பாக்கியலெட்சுமித் தாயே. மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்ததுபோதும் விண்ணில் இனிதேவாழநினைத்தாயோ? கணப்பொழுதினில் யாவருக்கும்கவலை கள்சூழ மனோன்மணியம்மன் மலரடி நிலைத்தாய் வாழுகின்றாய் எங்கள் நெஞ்சமதில் நீயே தொழுகின்றோம் எங்கள் குல தெய்வம் தாயே.

இங்ஙனம்
சதாசிவக்குருக்கள் குடும்பம்

பாக்கியலெட்சுமி வாசம்,
நல்லூர் மார்க்கட்,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

[A-1458]

## கொடித்தம்பம்

யாழ்ப்பாணம், திங்கள்

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தானத்திலிருந்த பழைய கொடித்தம்பம் சண்டிலிப்பாய் ஆலங்குளம் முருகமூர்த்தி கோயிலுக்கு வழங்கப்பட்டுள்ளது

12 ஆலயங்கள் விண்ணப்பத்திரங்களை அனுப்பிவைத்ததைத் தொடர்ந்து திருவுளசீட்டு மூலம் கொடித்தம்பம் வழங்கப்பட்டது. (வா)

## சவூதியில் பாராட்டு


(சவூதியிலிருந்து எம். சுபேந்திரன்)

சவூதி அரேபியாவில் ஆஸ்பத்திரியொன்றில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் இருவர் இங்கே பாராட்டுப் பெற்று கௌரவிக்கப்பட்டுள்ளார்கள்.

அல்ஹாஹ என்னுமிடத்திலுள்ள கிங் ஹாலிட் சுகாதார அமைச்சு ஆஸ்பத்திரியில் பணியாற்றும் பருத்தித்துறையைச் சேர்ந்த கே குகனேசன் இணுவிலைச் சேர்ந்த துரைசிங்கம் அன்பழகன் ஆகியோரே பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டவர்களாவர்.

அல்-ஹர்ஜில் உள்ள தென் கொரிய நாட்டவரின் நிர்வாகத்தில் இயங்கும் கம்பனியில் இவர்கள் தமது கடமையை மிகத் திறமையாகச் செய்தார்கள் என்று கம்பனி இவர்களைப் பாராட்டிக் கௌரவித்துள்ளது.

பாராட்டு வைபவம் அண்மையில் பிரஸ்தாப ஆஸ்பத்திரி மண்டபத்தில் நடந்தது கம்பனியின் நிர்வாக முகாமையாளர் திரு. ஜோன்கம் இருவருக்கும் தலா ஒவ்வொரு மணிக்கூட்டை. அன்பளிப்பாக வழங்கி இருவரையும் வெகுவாகப் பாராட்டிப் பேசினார். (இ)



புலோலி றோமன் கத்தோலிக்க பாடசாலை அதிபர் திரு. எஸ். அந்தோனிப்பிள்ளை 3. வருட ஆசிரிய சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார். போயிட்டி இளவாலையைச் சேர்ந்த இவர் மன்னார், கழுத்துறை, வவனியா, பேருவலை, பருத்தித்துறை ஆகிய பகுதிகளில் சிறந்த ஆசிரியப் பணியாற்றியுள்ளார்.

யாழ். மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர்சங்க வடமராட்சிக் கிளை பொருளாளராகப் பல வருடங்கள் சேவையாறறிய திரு. அந்தோனிப்பிள்ளை சமூக, சமய விளையாட்டுத்துறை நாடகத்துறைகளில் முன்னின்று செயற்பட்டு வருவதோடு நாட்டுக் கூத்துக்கள் பலவற்றைப் பழக்கி மேடையேற்றிய இவர் இணக்கசபை உறுப்பினராகவும் சேவையாற்றுகின்றார்.

## பிரயாண ஒழுங்குகள்

**உடனடியாக கனடாவுக்கு**

போகிறவர்கள் செவ்வாய்க்கிழமைக்கிடையில் (14-10-86) என்னுடன் தொடர்புகொள்ளவும் அத்துடன் பாஸ்போட், (Bond) பொண்ட் ஆகியன உடனடியாக செய்துகொடுக்கப்படும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

**திரு.S கணேசலிங்கம்,**

(கராட்டி மாஸ்டர்)

கற்பகப்பிள்ளையார் கோவிலடி, உரும்பிராய். (C5182)

# "இந்திய — ராணுவ உற்பத்திதுறைக்கு அமெரிக்கா உதவும்"

## புதுடில்லியில் அமெரிக்க பாதுகாப்பமைச்சர்

புதுடில்லி, அக்டோபர் 12

**இந்தியா நவீனரக ராணுவ தளபாடங்களை உற்பத்திசெய்ய அமெரிக்கா உதவ முன்வந்துள்ளது. இதனை அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் கஸ்பர் வெய்ன்பேகர் நேற்று தெரிவித்தார்.**

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை அவரது அலுவலகத்தில் சந்தித்தபின்னர் செய்தியாளர்கடையே பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தியாவுக்கு நான்குநாள் விஜயமொன்றை மேற்கொண்டு திரு வெய்ன்பேகர் நேற்று புதுடில்லி வந்துசேர்ந்தார்.

நேற்று மாலை அவர் பிரதமர் ராஜீவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். சுமார் ஒன்றரை மணி நேரமாக நீடித்த இப்பேச்சுக்களின்போது இருதரப்பு விடயங்கள் ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

எவ்வகை ராணுவ தளபாடங்களை உற்பத்திசெய்ய இந்தியாவுக்கு அமெரிக்கா உதவிசெய்யுமென்பது தெரிவிக்கப்படவில்லை ஆயினும் இந்தியாவின் சிறு போர் விமான தயாரிப்புத் திட்டத்துக்கு அமெரிக்கா உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் இரவு நேர பார்வை உபகரணங்கள் மற்றும் ஒரிஸாவில் அமைக்கப்பட்டுவரும் ஏவுகணை சோதனை நிலையத்துக்குரிய நவீன உபகரணங்கள் ஆகியனவும் வழங்கப்படவுள்ளதாக தெரியவருகிறது.

அத்துடன் அதிநவீன கம்பியூட்டர் ஒன்றையும் இந்திய அரசுக்கு விற்க அமெரிக்கா முன்வந்துள்ளது. அமெரிக்காவின் நேசநாடுகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டுவரும் இக்கம்பியூட்டர் காலநிலைபற்றிய தகவல்களைப்பெற உபயோகிக்கப்படவுள்ளது. [ஊ]

**உலகச் செய்திகள்**

## அன்னை திரேசா விமான விபத்தில் உயிர்தப்பினார்

இலண்டன், ஒக். 12

அன்னை திரேசா பயணம் செய்த விமானம் விபத்துக்குள்ளாகியதால் ஆறுபேர் பலியாகினர். அன்னை திரேசா தெய்வாதீனமாக காயங்களின்றி உயிர்தப்பினார்.

இச் சம்பவம் மத்திய தன்ஸானிய நகரமொன்றில் நடந்தது

அவர் தன்ஸானிய தேவாலயமொன்றில் இருந்து இன்னொரு தேவாலயமொன்றிற்கு சக கன்னியாஸ்திரிகளுடன் புறப்பட்டபோதே இவ்விபத்து இடம்பெற்றது. அவர் பயணம் செய்த சிறு விமானம் ஓடுபாதையிலிருந்து வானேக்கிப் புறம்படத்தவறி

அன்னையை வழியனுப்ப வந்தோரை மோதியது இதில் தரையிலிருந்த ஆறுபேர் பலியானார்கள்.

அதிஷ்டவசமாக இந்தசிறு விமானத்திலிருந்த எவரும் காயமடையவில்லை இவ்விபத்துக்கான காரணம்பற்றி இன்னும் அறியப்படவில்லை. (ஊ)

## றெய்க்ஜாவிக்கில் முதல் சந்திப்பு
# சுமுகமான முறையில் நடைபெற்றதாக அறிவிப்பு

லண்டன். அக். 12

அமெரிக்க ஜனாதிபதி றீகனுக்கும் சோவியத் அதிபர் கோர்பச்சேவுக்கும் இடையில் ஐஸ்லாந்தின் தலைநகர் றெய்க்ஜாவிக்கில் நேற்று நடைபெற்ற சந்திப்பு சுமுகமான முறையில் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இச் சந்திப்பின்போது இரு தலைவர்களுக்கும் உதவியாக வேறு எவரும் கலந்துகொள்ளவில்லை சுமார் 4 மணிநேரமாக இரு தலைவர்களும் தனிமையாக பேச்சுவார்த்தை நடத்தியபின்னர் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸும், சோவியத வெளியுறவு அமைச்சர் திரு ஷெவட்நாட்ஸேயும் கலந்துகொண்டனர்.

இச் சந்திப்பின் இறுதியில் இரு உழைக்கும் குழுக்கள் நியமிக்கப்பட்டன ஒரு குழு. வல்லரசுகளிடையே ஆயுதக் கட்டுப்பாடு பற்றியும் மற்றைய குழு மனிதாபிமான, இருதரப்பு, பிராந்தியவிடயங்கள் பற்றியும் ஆராயவுள்ளன.

இவை தமது அறிக்கையை இன்று மாலை மீண்டும் நடைபெறவுள்ள றீகன்—கோர்பச்சேவ் சந்திப்பின்போது சமர்ப்பிக்கவுள்ளன.

இதனிடையே நேற்று நடைபெற்ற சந்திப்புப்பற்றித் தகவல் வெளியிட்ட 'டாஸ்' செய்தி ஸ்தாபனம் இச் சந்திப்பு சுமுகமான முறையில் நடைபெற்றதாகத் தெரிவித்துள்ளது இந்த இரு தலைவர்களுக்கிடையிலான முதற் சந்திப்பு கடந்தவருடம் நவம்பர் மாதம் ஜெனீவாவில் நடைபெற்றது தெரிந்ததே. (ஊ)

## பிரிட்டனிலிருந்து வெளியேறப் பணிப்பு

லண்டன், அக். 12

பாலஸ்தீன விடுதலை ஸ்தாபனமொன்றின் அங்கத்தவர்களெனக் கருதப்படும் ஆறுபேரை பிரிட்டிஷ் அரசாங்கம் தனது நாட்டைவிட்டு வெளியேறும்படி உத்தரவிட்டுள்ளது.

அபூ நிடாலின் ஸ்தாபனத்தின் அங்கத்தவர்களென சந்தேகிக்கப்படும் இவர்கள் கடந்த இருவாரகால இடைவெளியில் பிரிட்டிஷ் பொலிஸின் விசேட படைப்பிரிவினரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

நாட்டின் நலனுக்கு இவர்களால் குந்தகம் விளையக்கூடும் எனக் காரணம் காட்டியே இவர்களை பிரிட்டனைவிட்டு வெளியேறும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த ஆறுபேரில் நால்வர் ஜோர்டானியர். ஒருவர் ரியூனிசியப் பிரஜை மற்றையவர் சுவீடன் நாட்டைச் சேர்ந்தவர். [ஊ]

## தட்டுப்பாடு

புங்குடுதீவு, ஞாயிறு

புங்குடுதீவு தபாற்கந்தோரில் கடந்தசில வாரங்களாக வான் கடிதங்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது இதனால் வெளி நாடுகளுக்கு குறைந்த செலவில் தபால்களை அனுப்ப முடியாமலிருக்கிறது.

## அடிக்கல் நாட்டப்பட்டது

யாழ்ப்பாணம், திங்கள்

ஏழாலை கிராமத்துக்கான அரசாங்க மருந்தகத்துக்கு நிரந்தரமாக கட்டிடம் ஒன்றைக் கட்டுவதற்கு வலிதெற்கு உதவியரசாங்க அதிபர் திரு. ஆ மகாலிங்கம் அடிக்கல் நாட்டிவைத்தார்.

## எரியூட்டும் குண்டிலிருந்துபாதுகாப்பு தீக்காயங்களுக்கான முதலுதவிப் படிமுறைகள்

பொதுவாக தீக்காயங்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்படுகின்றன அவை முதலாம், இரண்டாம், மூன்றும் நிலைத் தீக்காயங்கள் எனப்படும் கொப்புளங்களை ஏற்படுத்தாத சிவந்த, வலியுள்ள சிறு தீக்காயங்கள் முதலாம் நிலைத் தீக்காயங்கள் எனவும் கொப்புளங்களுடன் கூடிய சிவந்து, வலியைத் தரக்கூடிய தீக்காயங்கள் இரண்டாம் நிலைத் தீக்காயங்கள் எனவும், தோலைச் சேதப்படுத்தி கரிந்த தசையோ வெண்ணிறமான தசையோ வெளியே தெரியும்வண்ணம் காணப்படும் வலியற்ற காயங்களாயின் மூன்றும்நிலைத் தீக்காயங்கள் எனவும் கூறப்படுகின்றன இம்மூன்று நிலைகளுக்கும் வேறுபட்ட முதலுதவிச் சிகிச்சையே அளிக்கப்படவேண்டும் ஆனால் தீக்காயங்களுக்கான முதலுதவியின்போது காயங்களை தொற்று ஏற்படாமல் பேணுவதே முக்கியமானது என்பதை மறக்கலாகாது.

படி 1:

முதலாம் நிலைத் தீக்காயமாயின் காயம்பட்ட இடத்தை உடனடியாக குளிர்ந்த நீருக்குள் வைக்கவும். நீரை மேலும் குளிரப்பண்ணுவதற்காக பனிக்கட்டித் துண்டங்களோ, உப்போ நீருக்குள் இட வேண்டாம். வேறு எந்த கிகிச்சையும் தேவையில்லை. வலிக்கு 'அஸ்பிறின்' சாப்பிடவும்.

படி 2:

இரண்டாம் நிலைத் தீக்காயத்திற்கும் உடனடியாக காயம்பட்ட இடத்தை குளிர் நீருக்குள் வைக்கவும் இங்கும் நீரை மிகையாகக் குளிர்விக்க முயற்சிக்க வேண்டாம் உடனடியாக கொப்புளங்களை உடைப்பதும், தோலை அகற்றுவதும் தொற்று ஏற்படுத்துவதற்கான வாய்ப்பை அதிகரித்துவிடும். ஆனால் ஏற்கனவே கொப்புளங்கள் உடைந்திருப்பின் கொதித்தாறிய நீரும், சோப்பும் கொண்டு அதைக் கழுவவும் சிறிதளவு வாஸலீனை கொதிக்கவைத்து ஆறிய பிற்பாடு கிருமிநீக்கி அதை ஒருதுண்டு வலைத்துணியின்மீது தடவி காயத்தின் மீது போடவும். வாஸலீன் இல்லாவிட்டால் சிறிதளவு ஜென்ஷியன் வயலட் போட்டுத் தீக்காயத்தை மூடாமல் திறந்தபடியே விட்டுவிடவும்.

படி. 3:

மூன்றும் நிலைத் தீக்காயங்கள் ஆபத்தானவை. கூடிய விரைவில் மருத்துவ உதவி கிடைக்கச் செய்யுங்கள். எரிந்து உடலுடன் ஒட்டிப்பிடித்திருக்கும் உடுப்புகளை அகற்ற முயற்சிக்கவேண்டாம் தேவையானபோது மாத்திரமன்றி மற்ற வேளைகளில் காயத்தினை தொடவேண்டாம். இவற்றினால் காயம் தொற்றுக்குள்ளாகும் அபாயம் அதிகமாகும். ஆனால் புகைந்துகொண்டோ பொசுங்கிக்கொண்டோ காணப்படும் துணிகளை மேலதிக சேதத்தைத் தடுப்பதற்காக உடனடியாக அகற்றவும்.

காயங்களில் கொசு, இலையான் போன்றவை மொய்க்காமலிருப்பதற்காக சுத்தமான, மிருதுவான பருத்தித் துணியால்போர்த்தவும். காயத்தில் இருந்து வடியும் இரத்தம், நீர் போன்றவற்றினால் அழுக்கடையும் போதெல்லாம் துணிகளைமாற்றி சுத்தமாய் வையுங்கள். காயம் பட்டவருக்கு பெனிசிலின் கொடுக்கவும். கிறீஸ், கொழுப்பு கோப்பித்தூள், மூலிகைகள், மலம் போன்றவற்றை ஒருபோதும் தீக்காயத்தின் மீது போடாதீர்கள். தீப்பட்ட பரப்பு மிக அதிகமானதாகவோ அல்லது காயத்திலிருந்து அதிகளவு நீர் வெளியேற்றம் காணப்பட்டாலோ காயம்பட்டவருக்கு குடிப்பதற்கு நிறைய திரவ ஆகாரங்கள் கொடுக்கவும். உடனடியாக மருத்துவஉதவி கிடைக்குமாயின் இது தேவையில்லை. ஆனால் 4 மணி நேரமாக உதவி எதுவும் வரவில்லையானால் திரவ ஆகாரங்களைக் கொடுக்கலாம் முக்கியமாக இதற்கென ஒரு விசேஷ பானம் தயாரிக்கப்பட்டு கொடுக்கப்பட்டால் சிறப்பாயிருக்கும். அதாவது ஒன்றரைப் போத்தல் தண்ணீரில் அரைத் தேக்கரண்டி அப்பச் சோடாவும் ஒரு தேக்கரண்டி உப்பும் சேர்த்துக் கரைத்துக் கொடுக்கவும். வசதி இருக்குமாயின் பாதிப்புற்றவர் விரும்பி அருந்துவதற்கு ஏற்ற வகையில் இரண்டு அல்லது மூன்று மேசைக்கரண்டி சீனி இடப்பட்ட தோடம்பழ அல்லது எலும்பிச்சம்பழச் சாறையும் மேற்கூறிய பானத்துடன் கலந்து கொடுக்கலாம். காயம் பட்டவர் அடிக்கடி சிறுநீர் கழிக்கும்வரை இப் பானத்தை எவ்வளவு அதிகமாகக் கொடுக்க முடியுமோ அவ்வளவு அதிகமாக இடைவிட்டுக் கொடுங்கள்.

மேற்கூறிய முதலுதவி முறைகளில் படி 3 இல் கூறப்பட்டுள்ளபடியேதான் எரியூட்டும் குண்டுகளின் நேரடித் தாக்கத்தில் பாதிப்புற்ற ஒருவருக்கு சிகிச்சை வழங்க வேண்டும் ஆனால் இக்குண்டுகளின் மூலம் பரவிய தீயினால் ஏற்பட்ட ஏனைய வகைக் காயங்களுக்கு அவற்றின் தன்மைக்கேற்ப முதலுதவியை வழங்கலாம்.

இனி நாம் இவ்வகைக் குண்டுகளினால் வீடுகளிலோ தொழிற்சாலைகளிலோ அல்லது வேறு முக்கிய இடங்களிலோ பரவிய தீயினை கட்டுப்படுத்துவதற்கு அல்லது அணைப்பதற்குரிய வழிவகைகளைப் பார்ப்போம். (தொடரும்)

## தமிழ்த்தின போட்டிகள்

வட்டுக்கோட்டை, ஞாயிறு

வட்டுக்கோட்டை கொத்தணி அமைப்பின் கீழ் இயங்கும் பதினைந்து பாடசாலைகள் "தமிழ்த் தின விழா" போட்டிகளிற் பங்குகொண்டன. மேற்படி போட்டிகள் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் கடந்தவாரம் நடைபெற்றன. [சி]

## வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், திங்கள்

'ஆகுதி' சிறுகதைத் தொகுதி வெளியீட்டுவிழா எதிர்வரும் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லூர் இந்து விடுதியில் நடைபெறும் மல்லிகைப் பந்தல் ஆதரவில் நடைபெறும் இவ் வெளியீட்டுவிழாவுக்கு பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் தலைமைவகிப்பார்.

## மணிவாக்கு

எந்த மனிதன் மனதிலும் மேல் ஆதிக்கத்துக்கெதிரான இரகசியக் குரல் ஒன்று இருக்கவேசெய்கின்றது, ஒருவனை கட்டளையிட்டு பணிந்து நடக்கச்செய்யலாம்; ஆனல் மனதால் மதிக்கச்செய்யமுடியாது.

— வில்லியம் ஹாஸ்லிட்.

## நமது நோக்கு

# மட்டக்களப்பில் ஒரு புதிய பல்கலைக்கழகம்

மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரி பல்கலைக்கழக அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டிருக்கும் செய்தி மகிழ்ச்சியுடன் வரவேற்கப்படவேண்டிய ஒன்று.

கடந்த எட்டாம் திகதி புதன்கிழமை இப் பல்கலைக்கழகத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் கொழும்பிலுள்ள பல்கலைக்கழக மானியக்குழு உரையாற்று மண்டபத்தில் நடைபெற்றது. இதன் வேந்தராக பெரியார் சுல்தான் பாவா அவர்களும் உபவேந்தராக பேராசிரியர் கே. டி. அருள்பிரகாசம் அவர்களும் பதவி ஏற்றுள்ளார்கள்

1981ம் ஆண்டு மட்டக்களப்பு பல்கலைக்கல்லூரி ஏற்படுத்தப்பட்டு பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டிருந்தது. நாட்டில் அடிக்கடி ஏற்பட்டுவந்த இனக்கலவரங்களும் போக்குவரத்து கஷ்டங்களும் பேராதனைப் பல்கலைக்கழக அறிஞர்கள் மட்டக்களப்புக்கு சென்று வருவதை தடுத்துவந்தன. 1983ம் ஆண்டுக்குப் பின் அவர்கள் அங்கு செல்வதை முற்றாகவே நிறுத்திவிட்டார்கள். மேலும் கல்லூரியிலிருந்து சிங்கள அலுவலர்களும், மாணவர்களும் வெளியேற நேர்ந்தது. பேராசிரியர் அருள்பிரகாசம் 1985ம் ஆண்டு கல்லூரியின் இயக்குநராக நியமிக்கப்பட்டார் இதையடுத்து கல்லூரி நிர்வாகத்துக்கும் பேராதனைப் பல்கலைக்கழக கல்விமான்களுக்குடையில் பலத்த வாக்குவாதங்கள் இடம் பெற்றுள்ளதுடன் மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரியில் படித்து வெளிவரும் மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்க பேராதனைப் பல்கலைக்கழகம் மறுத்துவிட்டதாகவும் கூறப்பட்டது.

இந்த நிலைமையில் மட்டக்களப்புப் பல்கலைக்கழகக் கல்லூரியை பேராதனைக் கடுதது அருகில் உள்ள ஒரு பல்கலைக்கழகத்துடன் இணைத்துவிடுவது அல்லது தனித்து இயங்கும்படி விடுவது என்ற நிலை உயர்கல்வி அமைச்சுக்கு ஏற்பட்டது. மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரி தமிழ்ப்பிரதேசமொன்றில் பெரும்பான்மையும் தமிழ்பேசும் மாணவர்களையே உள்ளடக்கியது என்ற முறையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படுவதே மிகப் பொருத்தமாக இருந்திருக்கும். இதிலும் போக்குவரத்து மற்றும் நிர்வாகக் கஷ்டங்கள் ஏற்படுவது இயற்கை. கொழும்புடன் இணைக்கப்பட்டாலும்கூட அதேநிலைதான்.

எனவே மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரியை ஒரு தனி பல்கலைக்கழகமாக இயங்க அனுமதிப்பதுஎன்ற முடிவை உயர்அதிகாரிகள் எடுக்க முன்வந்தமை பாராட்டுக்குரியது.

இதன் அங்குரார்ப்பண விழாவை மட்டக்களப்பிலேயே வைக்கமுடியாத நிலைமை இருந்துள்ளது. அதேவேளை இப் பல்கலைக்கழகத்தில் பயிற்சிகள் யாவும் ஆங்கிலத்திலேயே தொடர்ந்து இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலம் அவசியமான ஒரு மொழி; ஆரம்பநிலையிலிருந்தே சிறுவர்கள் அந்த மொழியையும் கற்றுக்கொள்ளவேண்டும் என்பது ஒரு கொள்கையாக இருக்கலாம். சகல பல்கலைக்கழகங்களிலும் ஆங்கிலத்தை மாணவர்கள் சரளமாகப் பயன்படுத்தும் வகையில் பயிற்சியளிக்கப்படுவதும் அவசியம். ஆனல் தாய் மொழிக்கல்விக்கு உலகம் முழுவதும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுவரும் இந்தக்காலத்தில் வேற்று மொழியொன்றை பயிற்று மொழியாகக் கொண்ட பல்கலைக் கழகமொன்றினை குறித்த ஒரு பிரதேசத்தில் உருவாக்குவதில் அர்த்தம் இருக்கவேண்டும்.

நாடுமுழுவதற்குமான ஆங்கிலத்தில்மாத்திரமேபயிற்சியளிக்குப் ஒரு பல்கலைக்கழகம்தேவையெனில் அதனை கொழும்பில் அல்லது ஒரு பொதுவான நகரில் சகல வசதிகளுடனும் ஆரம்பிக்க முயற்சி செய்வத உயர் கல்வி அமைச்சின்பொறுப்பு

அப்படியான பல்கலைக்கழகம் மட்டக்களப்பில் தான் அமையவேண்டும் என்றால்கூட சுதேசமொழிக்கான பல்கலைக்கழகம் ஒன்றை அங்கு புதிதாகவேனும் ஆரம்பிக்கவேண்டியதும் அவசியமே!

கிழக்கிலங்கையிலும் அதையடுத்துள்ள பகுதியிலும்தமிழில்மேற்கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்களுக்கு மட்டக்களப்பில் தமிழ் பல்கலைக்கழகம் ஒன்று இருப்பது மிகவும் அவசியம்

அப் பிரதேசத்தின் தமிழ் மரபுகள், வரலாறுகளைப் பேணவும், அவை குறித்த ஆராய்ச்சிகளை நடத்தவும் அப்பிரதேசத்தைப் பற்றி வெளியாரும், வெளிநாட்டவரும் விபரங்கள் தெரிந்து கொள்ளவும் இது பெரிதும் உதவும்

மட்டக்களப்பு பல்கலைக் கழகம் ஆங்கில மொழி பல்கலைக்கழகமாகவே இயங்கப்போகின்றது என்ற செய்தி அப்பிரதேச கல்விமான்களுக்கும் தமிழ் அறிஞர்களுக்கும் புலவர்களுக்கும் மட்டுமல்ல மாணவர்களுக்கும் கூட உற்சாகமளிக்கும் என்று சொல்ல முடியாது.

எனவே ஆங்கிலமொழியைப்போதன மொழியாகக் கொண்ட இப்பல்கலைக் கழகத்தை தமிழ் மொழியில் பயிற்சிகளை நடாத்தும் கல்லூரிகள் அல்லது வளாகங்களையும் இணைத்துச்செயல் படக்கூடியதாக உருவாக்க முயற்சிப்பது வரவேற்கக் கூடியது.

அந்த முயற்சியில் புதிய பல்கலைக்கழகத்தின் வேந்தர். துணைவேந்தர்போன்ற அறிஞர்களும், அப்பகுதி கல்விமான்களும் ஈடுபடுவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

# 10 லட்சம் வீடுகட்டும் திட்டத்தில் தமிழ் மக்களுக்கான பங்கு என்ன?

அடுத்த ஆண்டு சர்வதேச வீடமைப்பு ஆண்டாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவிலேயே 20 லட்சம் மக்கள் வீடில்லாமல் இருப்பதாக இலங்கையின் பிரதமர் திரு. பிரேமதாசா குறிப்பிட்டுள்ளார். இருப்பினும் இலங்கையில் வாழும் 35 லட்சம் தமிழ்ப்பேசும் மக்களின் மனக்குறையையும் சேர்த்தே சர்வதேச வீடமைப்பின் முக்கியத்துவம் இலங்கையில் உணரப்படவேண்டும்

இலங்கையின் குடிசனத்தைப்பற்றி 'Europa Year Book' பின்வரும் புள்ளி விபரத்தை வெளியிட்டுள்ளது.

### திக்கவயல் சி. தர்மகுலசிங்கம்

| | |
|---|---|
| சிங்களவர்கள் | 1,04,02,000 |
| தமிழர்கள் (இந்தியவம்சாவழியினர் உட்பட) | 26,69,000 |
| தமிழ்பேசும் முஸ்லிம்கள் | 9 78 000 |
| மற்றவர்கள் | 1 40,000 |

இக் குடிசனத் தொகையை உற்று நோக்கும்போது இலங்கையில் தமிழ்பேசும் சிறுபான்மையின மக்கள் குடிசனத் தொகையின் கால்வாசிப் பங்கை அடைந்துள்ளனர். எனவே இலங்கையிலே பத்து லட்சம் வீடுகள் அமைக்கப் பட்டால் தமிழ் பேசும் மக்களுக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவேண்டும். இதுவே தர்மிஷ்ட அரசாங்கம் ஒன்றின் நோக்கமாகவும் இருக்கும்.

பிரதமர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட 10 லட்சம் வீட்டுத் திட்டத்தின் கீழ் தென்னிலங்கையில் மக்கள் பெரும் லாபமடைந்திருக்கிறார்கள். மட்டக்களப்பு மாவட்டம் ஓரளவு பலன்பெற்றுள்ளது அம்பாறை, திருகோணமலை, வவுனியா என்பனவற்றில் அமைக்கப்பட்ட மாதிரிக் கிராமங்கள் பெரும்பான்மை மக்களுக்கே இருப்பிட வசதியைப் பெற்றுக் கொடுத்துள்ளது யாழ்ப்பாண மாவட்டம் கடுமையாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது புள்ளிவிபரங்கள் இதனைத் தெளிவுபடுத்துகின்றன. வீடமைப்புத் திட்டம் அரசியல், சமய, சாதிரீதியாகப்பாகுபாடுகாட்டாத ஒன்று எனப் பிரகடனப்படுத்தப்பட்ட போதும் பாகுபாடுகள் தெளிவாகத் தெரிகின்றனஎனலாம்.

அம்பாறையில் 21-06-80ல் இரண்டு மாதிரிக் கிராமங்கள் திறக்கப்பட்டன. 1. மங்கலகம, 2. சாரங்கம இவை இரண்டும் பெரும்பான்மைமக்களுக்கே இருப்பிட வசதியைக் கொடுத்துள்ளன. அத்துடன் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றத்தை ஊக்கப்படுத்தியிருக்கின்றது.

1979ம் ஆண்டு தொடக்கம் 23-06-86 வரை 414 வீடமைப்புத் திட்டங்கள் நாடு எங்கும் கட்டிமுடிக்கப்பட்டன இதிலே மன்னார் மாவட்டத்துக்கு மடு மாதா மாதிரிக் கிராமத்தைத் தவிர வேறு எதுவும் கிடைக்கவில்லை. தாம்கட்டியவீடுவாசல்களையே கைவிட்டுவிட்டு இந்தியாவுக்கு ஓடிய குடியிருப்பாளர்களின் பட்டியலில் மன்னார் முன்னணியில் திகழ்கின்றது.

போதும், கரவெட்டியில் ராஜகிராமமும், காங்கேசன்துறையில் வசந்த கிராமமுமே தமிழ் மக்களுக்குக் கிடைத்தவை. மொத்தத்தில் யாழ்ப்பாணம் ஒரு புறக்கணிக்கப்பட்ட இடமாகக் கருதப்பட்டுள்ளது எனலாம்.

இதுவரை கட்டிமுடிக்கப்பட்ட வீடுகளின் மாவட்டப் புள்ளிவிபரம் கீழ் வருவனவாகும்.

| மாவட்டம் | மாதிரிக் கிராமங்கள் |
|---|---|
| 1. கொழும்பு | 15 |
| 2. கம்பஹா | 21 |
| 3. களுத்துறை | 27 |
| 4. கண்டி | 11 |
| 5. மாத்தளை | 21 |
| 6. நுவரேலியா | 10 |
| 7. காலி | 19 |
| 8. மாத்தறை | 16 |
| 9. அம்பாந்தோட்டை | 15 |
| 10. அம்பாறை | 15 |
| 11. குருநாகல் | 63 |
| 12. புத்தளம் | 9 |
| 13. அனுராதபுரம் | 39 |
| 14. பொலநறுவை | 27 |
| 15 பதுளை | 25 |
| 16. மொனருகலை | 11 |
| 17. இரத்தினபுரி | 37 |
| 18. கேகாலை | 14 |

திருகோணமலையில் பக்மீகம, மகறு கிராமம், விபுலானந்த கிராமம், டனியகம, அம்போகம, சுமீடகம, நீலகம ஆகியமாதிரிக் கிராமங்கள் அமைக்கப்பட்டன. இதில் விபுலானந்த கிராமம் தவிர மிகுதியானவை பெரும்பான்மை மக்களுக்கே தமிழ்ப் பிரதேசத்தில் இருப்பிட வசதிகளைக் கூட்டியுள்ளன.

வவனியா ரங்கிதகம என்ற இடத்தில் மாதிரிக் கிராமம் அமைந்துள்ளது. இது தமிழ் மக்களுக்கு முழுமையான சேவை செய்யவில்லை.

யாழ் மாவட்டம் பத்து லட்சத்துக்கு மேற்பட்ட குடி மக்களைக் கொண்டிருந்த

### தமிழ்ப் பிரதேசங்கள்

| | |
|---|---|
| 1. மட்டக்களப்பு | 08 |
| 2. மன்னார் | 01 |
| 3. திருகோணமலை | 07 |
| 4. முலலைத்தீவு | 01 |
| 5. யாழ்ப்பாணம் | 02 |

நீதியான முறையில் வீட்டுத் திட்டம் பங்கிடப்பட்டிருந்தால் தமிழ்ப் பிரதேசங்கட்கு நூற்றுக்கு மேற்பட்ட மாதிரிக் கிராமங்கள் கிடைத்திருக்கவேண்டும். முழுமையாக அவர்கட்குக் கிடைத்த மாதிரிக் கிராமங்கள் பதினைந்து கூட இல்லை.

சமீபத்தில் நடைபெற்ற வன்செயல்களால் கிழக்கு மாகாணத்தில் உள்ள கிளிவெட்டியில் பெரும்பான்மையான வீடுகள் எரிக்கப்பட்டன காரைதீவு, புல்மோட்டை, கன்னியா, கட்டைபறிச்சான் நிலாவெளி, 10-ம் வாரிட் (திருமலை) உப்புவெளி, யாழ்ப்பாணத்தில் கந்தாமடம், வல்வெட்டித்துறை, ஆதிகோவிலடி, மயிலியதனை, தொண்டமானாறு, பருத்தித்துறை, சுப்பர் மடம் என்பனவற்றிலும் மொத்தமாக அழிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை பத்தாயிரத்துக்கு மேல!

எனவே எதிர்காலத்தில் சர்வதேச வீடமைப்பில் அகதிகளான தமிழர்கட்கே வீடு கட்டுவதில் முதலிடம் கொடுக்கப்பட வேண்டும்.

# தமிழ்மக்களுக்கு சமாதானம் வேண்டி ஜப்பானிலிருந்து ஒரு கடிதம்

"யாழ்ப்பாணத்தில் நான் இருந்த காலத்தை எனது வாழ்நாளில் மறக்கவே முடியாது. நீங்கள்படும் துன்பங்களையும் நீங்கள் வாழும் சூழ்நிலைகளையும் நினைக்கும் போதெல்லாம் எனது இதயம் துயருறுகிறது ஈழத் தமிழருக்கு அமைதி விரைவிலேயே கிட்ட வேண்டுமென நான் தினமும் பிரார்த்தனை செய்கிறேன்"

இவ்வாறு கடந்த இரு ஆண்டுகட்கு முன்பு யாழ் நகருக்கு விஜயம் செய்திருந்த ஜப்பானிய மதகுருவான வண மசாவோ இஷிதானி யாழ் மக்களுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் கூறியுள்ளார்.

இவரது கடிதத்தின் சாரம்சம் வருமாறு:-

"அமைதி வேண்டி பிரார்த்தனை செய்வதற்காக இரு ஆண்டுகட்கு முன்னர் நான் யாழ்ப்பாணம் சென்றேன் எனது குருவான நிச்சிடாட்சு ஃபியூயி கஷ்டமான சூழ்நிலையில் துயருறும் யாழ மக்களின் துயர் நீங்க எனது வாழ்க்கையை அர்ப்பணிக்குமாறு உத்தரவிட்டிருந்தார். "யாழ் நகரில் எனது நினைவுகள் நீண்டவை......

"எனது வருகைக்காக தனது வாசலில் காத்திருந்து நான் வந்தவுடன் உணவுப் பொட்டலமொன்றை என்னிடம் தந்த அந்த வயோதிப மாது... எனக்குத் தமிழைக் கற்றுத்தந்த அந்த அழகான குழந்தைகள்...... தங்கள் கோயில்களில் எனக்குத் துயில் கொள்ள இடமளித்த இந்துக்கள், தமது வறுமையையும் பாராது எனக்கு உணவு தந்தவர்கள்............

'நான் உங்கள் ஊரிலிருந்த போது தமிழ் மக்களுக்கு கடவுளின் கருணை கிட்ட வேண்டுமென இந்து. கிறிஸ்தவ ஆலயங்களுக்குத் தினந்தோறும் சென்று எனது மேளத்தையடித்து பிரார்த்தனை செய்தேன்.

'எனது குருவின் கட்டளையினை ஏற்று யாழ் வந்தநான் தமிழ் மக்களுக்கு புத்தரின் கருணை கிட்டவேண்டுமென்று இடைவிடாது பிரார்த்தனை செய்தேன். ஆயினும் அவர்களுக்கு உதவிசெய்யக்கூடிய நிலையில் நான் இருக்கவில்லை இந் நிலையில் அவர்களிடம் மன்னிப்புக் கேட்க எனக்கு வார்த்தைகளே இல்லை

"எனக்குப் பின் யாழ். சென்ற இன்னொரு இளம் குருவானவர் அங்கு கொல்லப் பட்டார். அது ஒரு துக்கமான சம்பவம் யாழ்ப்பாணத்தில் அமைதி மீண்டவுடன் அங்கு சென்று இறந்ததமதுமகனுக்கு [பிக்குவுக்கு] மலரணிவித்து பிரார்த்தனைசெய்ய அவரது பெற்றோர் விருமபுகின்றனர். ஹிரோஷிமா நாகசாகில் ஆயிரத்துக்கதிகமான மக்கள் கொல்லப் பட்டதையடுத்து ஜப்பானயர் யுத்தங்களை விரும்புவதில்லை.

இலங்கையில் நடைபெறும் வன்செயல்களைக் கேள்வியுற்ற ஜப்பானிய மக்கள் கவலையுறுகின்றனர்.

தமிழ் மக்கள் சரியான கருத்தை பொறுமையுடன் வன்முறையை கையாளாமல் கடைப்பிடிப்பார்களாயின் ஜப்பானிய மக்களாகிய நாம் உங்கள் பக்கத்திலிருந்து உங்க.

[5ம் பக்கம் பார்க்க]

## பொருட்காட்சி

[திருப்பிட்டி நிருபர்]

புங்குடுதீவு மேற்கு அ.மி.த.க. வித்தியாலய கல்விப் பொருட்காட்சி நாளை 14-ம் திகதி செவ்வாய்க்கிழமை வித்தியாலய அதிபர் திரு. சு. வோ. பூராசா தலைமையில் நடைபெறவுள்ளது. [ஊ]

## சமாதானம்---

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு உதவுவோம். யாரை யாவது நான் சந்திக்கும் போதெல்லாம் அவர்களிடம் தமிழ்மக்கள் நன்றியுள்ளவர்கள் பணிவானவர்கள் என்பதையே கூறுகிறேன்.

இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்ட சமாதானம் தமிழ்மக்களுக்குக்கிட்ட புத்தபெருமானை நான் பிரார்த்திக்கிறேன்.'' [செ]

## நன்றி நவிலல்



திருமதி குணமணி அல்பேட்

09-10-86 அன்று எமது இல்லத்தில் நடைபெற்ற ஈமக்கிரியையின் போது நேரில் கலந்துகொண்டும், மலர்வளையம் சாத்தியும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும். தமது அனுதாபங்களைத் தெரிவித்த லங்கா சிமெண்ட் லிமிட்டெட், காங்கேசன்துறை. Colombo, Ford Rhodes Thoran-ton and Company யாழ்ப்பாணம். கொழும்பு விற்பனைத் திணைக்களம் வடமாகாணம், கொழும்பு. தொலைத் தொடர்பு திணைக்களம் யாழ்ப்பாணம் இவற்றின் மேலதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும், ஊரார், உறவினர், நண்பர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இங்ஙனம்:
தாய,
அன்பின் கணவன்,
பிள்ளைகள்,
சகோதரிகள்;

'லூட்லண்ட்ஸ்',
லவ் லேன்,
உடுவில் C 5185


வெலிங்டன்

10-30, 2-30, 4-30, 6-30

பயங்கர சண்டை காட்சிகள் நிறைந்த

Space Hunter

(Adults only)

Sex-Action-Thrill

லிடோ

தினசரி காலை 10-30, மாலை 2-30, 6-30

பிரபு — நளினி நடித்த

3-வது வெற்றி வாரம் புதிய வெளியீடு கனரி

நியாயம்


# திட்டமிட்ட கல்வியே மக்களுக்குப் பயன்தரும்

## — சட்டத்தரணி உரை

மாவிட்டபுரம், ஞாயிறு

''தமிழ்மக்கள் கல்வியை பெருஞ்சொத்தாக போற்றி வளர்ப்பவர்கள் இன்றைய நிலையில் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து பாலர்கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை கல்வித்துறை வரையறுக்கப்பட்டு திட்டமிட்டு கல்வி புகட்ட வேண்டும் அவ்வாறில்லாத கல்வி எமது மக்களுக்கு பயன்தரா'.

இவ்வாறு மாவிட்டபுரம் அமெரிக்கமிஷன் தமிழ்கலவன் பாடசாலை பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட சட்டத்தரணி வி எஸ். கணேசலிங்கம் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் திரு மா. பாலசுந்தரம் தலைமையில் நடந்த இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

தாய்மொழிக்கல்வி மூலம் தான் சுயவிருத்தி ஏற்படும். ஆனால் தமிழ் மாணவர்கள் தாய்மொழிக்கல்வியை பெற சட்டமூலமான அங்கீகாரம் இன்னமும் இல்லாமல் இருக்கிறது. புதிதாக வகுக்கப்படும் திட்டங்களில் தாய்மொழிக்கல்வியை வலியுறுத்துவதுடன் எமது கல்வியை நாமே பேண எமக்கு அதிகாரங்களை ஏற்படுத்த வேண்டும்'' என்றார்

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தலைவர் திரு. என். சிவமகாராசா பேசுகையில் சிறிய பாடசாலைகளின் வளர்ச்சியில் நாம் அதிக அக்கறை கொள்ள வேண்டும் என்றார்.

வட்டாரக்கல்வி அதிகாரி திரு. பி. சிவஞானசுந்தரம் உட்பட பலர் உரையாற்றினர்.

கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (சி)

## மாணவர் புரிந்துணர்வு பேண விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், திங்கள்

மாணவர்களின் பரஸ்பர புரிந்துணர்வையும் உடல்வள ஆரோக்கியத்தையும் இன்றைய காலகட்டத்தில் பேணுவதற்காக மாணவர் முன்னணியின் விளையாட்டு விழா ஒன்று நடாத்தப்படவுள்ளது

இவ் விளையாட்டு விழா இம்மாதம் 25ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இவ் விளையாட்டு விழாவில் இடம்பெறும் போட்டிகளின் விபரம் வருமாறு:

பாடசாலை மாணவருக்கிடையில் 20 வயதிற்குட்டோருக்கான உதைபந்தாட்டப் போட்டி.

பாடசாலை மாணவர்களுக்கிடையில் 20 வயதிற்கு உட்பட்டோருக்கான பெண்களுக்குரிய வலைப்பந்தாட்டப் போட்டி

மாணவர்கள், பொதுமக்களுக்கான 10 மைல் மரதன் ஓட்டப் போட்டி

[மாணவர்கள், பொதுமக்கள் என இரு பிரிவுகளாக தெரிவு செய்யப்படுவர்.]

உதைபந்தாட்டம், வலைபந்தாட்டத்திற்கான விண்ணப்ப முடிவுத் திகதி 20-10-1986 போட்டிகள் இம்மாதம் 25-ந்திகதி ஆரம்பமாகும். மரதன் ஓட்டம் 26-ம் திகதி காலை 6 30 மணியளவில் திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் ஆரம்பமாகும். (மா)

## கேதாரவிரதம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், திங்.

பொலிகண்டி பத்திரகாளி அம்மன் கோயிலில் நேற்று கேதாரவிரதம் அனுஷ்டிப்பு ஆரம்பமாகியது. தொடர்ந்து 21 நாட்கள் நடக்கும் இந்த அனுஷ்டிப்பு தீபாவளி தினத்தன்று முடிவடையும். (ஔ)

## ரெட்டியார் சங்கம் உதயம்

யாழ்ப்பாணம் திங்கள்

யாழ்ப்பாணம் ரெட்டியார் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அண்மையில் தமக்கென ஒரு சங்கத்தை ஸ்தாபித்து உள்ளனர். இச்சங்கத்தின் தலைவராக கே. இராமலிங்கம், உபதலைவராக கே கொண்டு ரெட்டியும் செயலாளராக எஸ் ராமநாதனும் தெரிவுசெய்யப்பட்டனர். நிர்வாக சபை உறுப்பினராகப் 18 பேர் தெரிவு செய்யப்பட்டனர். (ஔ)

## பங்குத் தந்தை இடமாற்றம்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

கடந்த ஐந்து ஆண்டுகளாக மாதகல பங்குத் தந்தையாக கடமையாற்றிய அருட்திரு கிங்ஸ்லி சந்தியாப்பிள்ளை அடிகள் இம்மாதம் தொடக்கம் மயிலிட்டி பங்குத் தந்தையாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். [சி]

## வேலணை ஆரம்ப நீதிமன்ற நீதவான்

வேலணை, ஞாயிறு

வேலணை ஆரம்ப நீதிமன்ற நீதவானாக திரு பூதத்தம்பி சதா சிவரத்தினம் இம்மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிமன்றத்தில் பல வருட காலமாக பதிவாளராக கடமையாற்றி ஓய்வுபெற்ற பின்பு மல்லாகம் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக கடமையாற்றி வந்தார். [வா]

## தொலைபேசி---

[ம் பக்கத்தொடர்ச்சி]

நிலையில் இருந்தது. காலையில் வெளியிடங்களுடன் தொடர்பு கொள்ளக்கூடியதாயிருந்தாலும் பின்னர் வெளியிடங்களுடனான அனைத்து லைன்களும் அவுட்டாகின. [ஊ]


## அதிஷ்டலாப சீட்டு முடிவுகள்

### மானிப்பாய் உதயசூரியன் சனசமூக நிலைய

அதிஷ்டலாப சீட்டு முடிவுகள். பரிசு பெற்ற இலக்கங்கள் வருமாறு:

2619, 3867. 2824. 4073 2808. 1885, 0593. 2915, 3360. 4077, 1727, 09 0, 2636, 1197. 2257. 0441, 2565, 0795, 0873, 2372, 2523, 2209, 2814.

(C 5189)


# சொல்லாட்சி நிறைந்த கவிதைகள்!

## விமர்சன அரங்கில் உரை

ஊர்காவற்றுறை, ஞாயிறு

''மாத்தளை இராசலிங்கத்தின் கவிதைகள் சொல்லாட்சி நிறைந்துள்ளது. ஒரு விவரணச் சித்திரம்போல வறிய குடும்பத்தில் வாழும் மக்களைப் படம்பிடித்து. தன் கவிதைகளால் உணர்வுகளைத் தட்டி எழுப்புகிறார்.''

இவ்வாறு காவலூர் இலக்கிய வட்டத்தினரால் சுருவில் ஐயனார் ஜனசமூக நிலையத்தில் மாத்தளை ஆ ராஜலிங்கத்தின் 'புதிய யுக நாயகிகள்' என்ற கவிதை நூலின் விமர்சன அரங்கிற்குத் தலைமைவகித்துப் பேசிய திரு. ஆ. சபாரத்தினம் குறிப்பிட்டார்.

இந்த விமர்சன அரங்கில் புதுக் கவிதைகள்பற்றிய சர்ச்சையே கூடுதலாக எழுப்பட்டது. எல்லோரும் கவிஞர் என்று தம்மைக் கூறாமல் ஒரு பாரதியைப் போல ஒரு பாரதிதாசனைப்போல சந்தம், ஓசை போன்ற இலக்கண அமைப்புக்குள் கவிதைகள் எழுதுங்கள். அப்போதுதான் தமிழ் வாழும் என்று புதுக்கவிதை பற்றிய கருத்தில் திரு. சத்தியமூர்த்தி விமர்சனம் செய்தார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய சரவணையூர் மணிசேகரன் 'விமர்சனர் பாரதியையும் பாரதிதாசனையும் பற்றிப் பேசுகிறார். அப்பால் வந்த புதுமைப்பித்தன், பிச்சமூர்த்தி போன்றோர் அழகான கவிதைகள் எழுதியுள்ளார்கள் தமிழுக்கு தெரிந்தோ தெரியாமலோ புதுக்கவிதை அறிமுகப்படுத்தப்பட்டது. ஈழத்திலக்கிய உலகில் திக்வலைக் கமால், ஈழவாணன். எம் ஏ நுஃமான் போன்றோர் ஏன் மகாகவிகூட மரபைமீறிப் புதுக் கவிதைகள் படைத்திருக்கின்றார்கள்' என்று குறிப்பிட்டார்.

விமர்சன அரங்கில் கேதீஸ்வரி நடராசா, செல்வி தனுஷா வேதநாயகம், மயூரி நாதன் ஆகியோர் பேசினர். ஆசிரியர் மாத்தளை ஆ. இராசலிங்கத்தின் பதிலுரையின்பின் கவிஞர் திரு. லோகேந்திரலிங்கத்தின் நன்றியுரையுடன் விமர்சன அரங்கு நிறைவேய்தியது.

## வடபகுதி---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாடிக்கையாளருக்கும் வங்கி அலுவலகங்களுக்கு மிடையே உள்ள தொடர்புகள் விரிவடைந்து சென்றதும், மற்றும் கொள்ளைச்சம்பவங்களும் வங்கி நடைமுறைகள் செயல்படுவதற்கு தடையாக இருந்ததும் தெரிந்ததே.

மேலும் மக்கள்வங்கி நஷ்டத்தில் இயங்குவதாலும் தொடர்ந்து பல ஊழியர்களை கடமையில் வைத்திருக்கமுடியாமலிருப்பதாலுமே இவர்கள் வேலைநீக்கம்செய்யப்பட்டதாகவும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மக்கள் வங்கியின் தலைமை அலுவலக ஆளுநர் சபையின் தீர்மானத்துக்கிணங்க மேற்படி வங்கிப்பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [மா]

## மன்னார்பகுதி---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

''இந்த இராணுவத்திற்கு உதவியாக உயிலங்குளத்திலிருந்து வாகனங்களிலும் நடந்தும்வந்த பெருந்தொகையான ராணுவத்தினரை இடையிலேமறித்து தாக்குதலை புலிப்படையினர் மேற்கொண்டதில் முதல்வந்த இராணுவத்தினருக்கு உதவ முடியவில்லை. ஒருபக்கத்தாலும் இராணுவத்தினரால் பின்வாங்க முடியாதவாறு புலிப்படையினர் தாக்கிக்கொண்டு இருக்கின்றனர்

நேற்று மாலையளவில் இராணுவத்தாரப்பில் கொல்லப்பட்டவர்களையும் காயமடைந்தவர்களையும் ஹெலிக்கொப்டர் ஒன்று தாக்குதல்களுக்குமத்தியில் ஏற்றிச் சென்றது.

''அடம்பன் கிராமத்தைச் சுற்றிவளைக் முனைந்த படையினர் மீது முன்னேக்கிச் சென்று தாக்குதலை மேற்கொண்டதிலேயே மன்னார்ப்பகுதி பொறுப்பாளர் 'விக்ரர்' வீரமரணமடைந்தார்'' என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை அரச தரப்பினர் வெளியிட்டுள்ள தகவலில் கருணசேன என்ற ஹெலிகொப்டர் விமானி உட்பட மூவர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

## ரூபவாஹினியின்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருத்த வேலைகளில் ஈடுபட்டிருந்த மேற்படி பொறியியலாளர் குழுவினர்க்குப் பலத்த இராணுவப் பாதுகாப்புவழங்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. [ஊ]

## உதைபந்தாட்ட பயிற்சி வகுப்புகள்

வல்வெட்டித்துறை. ஞாயிறு

பருத்தித்துறைப் பகுதி உதைபந்தாட்ட லீக்கும் பருத்தித்துறைப் பகுதி உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கமும் சேர்ந்து திரு வீ கே. ஆறுமுகம் தலைமையில் நடாத்திய கூட்டத்தில் நவம்பர் மாதத்தில் அகில இலங்கை மத்தியஸ்தர் சங்கத்தினால் நடத்தப்பட இருக்கும் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் தெரிவுப்பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் முகமாக இம மாதம் 18ம 25ந் திகதிகளில் பயிற்சி வகுப்புகளை நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (வா)

## நீர்விநியோகத் திட்டம்

அராலி, ஞாயிறு

அராலி வடக்கு இரண்டாவது தண்ணீர் திட்டத்தின் இரண்டாம் கிணற்றுக்கான இயந்திரம், குழாய் அமைத்தல் வேலைகள் தற்போது நடைபெறுகின்றன விரைவில் இரண்டாம் தண்ணீர்திட்டப் பூர்த்தியடையும் எனத் தெரியவந்துள்ளது.

## வாழைச்சேனை---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நேற்றுக்காலை வாழைச்சேனை பொலிஸ் நிலையத்திலிருந்து இரு ஜீப் வண்டிகளில் புறப்பட்ட விசேட அதிரடிப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பொலிசார், பொலிஸ் நிலையத்திலிருந்து 200 யார் தூரத்தில் வந்துகொண்டிருந்த சமயம் எமது வீரர்கள் ஜீப் வண்டிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். அப்பொழுது முன்னால் வந்து கொண்டிருந்த ஜீப் வண்டியின் சாரதி நிலைதடுமாறியதால் ஜீப்வண்டி மரமொன்றுடன் மோதுண்டதாலும், எமது வீரர்களின் துப்பாக்கிப் பிரயோகத்தினாலும் இரு பொலிசார் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். மிகுதிப் பேர் பலத்த காயங்களுக்குள்ளானார்கள். [மா]

## 'அருமை மனிதன்' அமரர் க. செல்லையா

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருஞ் சிவஞானம் பெற்ற அமரர் கைலாயபிள்ளை செல்லையா இனிப் பிறவாப் பேரின்ப பேறு எய்தி விட்டார்.

இப் பெரியாரின் சடுதி மறைவை அறிந்த அளவிலே அவர் என்றும் வணங்கி வழிபடும் நல்லூர் கந்தசுவாமி கோவில் என் மனத்திரையில் காட்சியளித்தது. பிரதோஷ தினங்களிலும் கார்த்திகை போன்றமுருகனுக்குரியவிசேட தினங்களிலும் மஹோற்சவ விழாக்களிலும் இப் பெரியார் குடும்ப சமேதராகவும் தனித்தும் வழிபடும் காட்சி பக்திச் சுவை சொட்டி நிற்கும்.

தமிழோடிசை பாட மறந்தறியாத சிவ தொண்டன் 35 ஆண்டுகளாக கூட்டுறவுப் பரிசோதகராக அரசபணி புரிந்து அண்மையில் இளைப்பாறியிருந்தார். இல்லறத்தை நல்லறமாகக் கொண்ட இனிய வாழ்வில் இறைவனுக்கு முதலிடம் அளித்து வந்தமையினால் ஓய்வு காலத்தில் தெய்வத் தொண்டே பெரிதெனக் கருதி இருந்தார்.

இதற்கு இரு வருடங்களில் முடிவு வருமென எவரும் எதிர்பார்க்கவில்லை. தலைவனை இழந்து தவிக்கும் குடும்பத்துக்கு அவர் ஏற்றிவைத்த அகல்விளக்கு வழிகாட்டுமென ஆண்டவனை பிரார்த்திப்போமாக. அமரரின் ஆன்மா சாந்தியடைவதாக.

—ச. நமசிவாயம்

# இளைஞர் நிலை

## சித்தரிக்கும் "வேள்வி"

இருண்ட குகை. இரும்புக் கம்பிகளால் போடப்பட்ட கதவுகள் உள்ளே எண்ணற்ற இளைஞர்கள். நீதி, நியாயம் அற்ற முறையில் நீண்ட கால சிறைவாசத்திற்குட்படுத்தப்பட்டவர்கள், அந்த அநீதிகளுக்கு எதிராக கொளுந்து விட்டு எரியும் அக்கினி.

ஆம், பூஸா வதை முகாமில் இன்றைய எமது தமிழ் இளைஞர் படும் அவலங்களைச் சித்தரிக்கும் விவரணப் படமான 'வேள்வி'யில் காட்டப்படும் ஆரம்ப நிகழ்ச்சியே மேலே குறிப்பிடப்பட்ட இந்த நிகழ்ச்சி.

30 நிமிட படமாயினும் எமது இளைஞர்கள் சிறைகளில் படும் அவலங்களை இதன் மூலம் நாம் அறியக்கூடியதாக உள்ளது.

அதிகாலைப் பொழுது. ஊர் விழித்தெழா நேரம். அந்தக் கிராமம் அரச படையினரால் சுற்றிவளைக்கப்படுகின்றது. துப்பாக்கி வேட்டுக்களும், காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

மாத்தளை ஆ. இராஜலிங்கம்

வீடுகள் தீயில் கொளுத்தப்பட்டு உடமைகள் சூறையாடப்படுகின்றன மனித உயிர்கள் மரணிக்கப்படுகின்றன. இளைஞர், யுவதி, வயோதிபர் என்று வித்தியாசமின்றி கைது செய்யப்பட்டு இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்படுகிறார்கள்.

மகிழ்ச்சியோடு இருந்த இல்லங்கள் அனைத்திலும் மரண ஓலம் இந்த ஒப்பாரிகளால் மரணித்தவர்களையும், கைதானவர்களையும் மீட்கத்தான் முடியுமா ?

இந்நிகழ்ச்சிகள் படத்தில் சம்பவங்களாக யதார்த்தப் பூர்வமாககாட்டப்படுகின்றன

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களின் நிலைதான் என்ன? அதனை பூஸா முகாமில பல மாதங்களாக பல துன்பங்களுக்கிலக்காகி விடுதலையாகி வந்திருக்கும் ஒரு இளைஞர் படத்தினூடாக தமது அவலங்களை வெளிப்படுத்துகின்றனர்.

கேளுங்கள்!

ஒருநாள் அதிகாலைப் பொழுதில் எமது கிராமத்தை சுற்றிவளைத்த அரசபடையினர் என்னோடு சேர்த்து பலரை கைது செய்தார்கள். கைதுசெய்யப்பட்ட நாம் குருநகர் இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு துவக்குமுனையில் பலவிதமான சித்திரவதைகளுக்கு மத்தியில் விசாரணை செய்யப்பட்டோம்.

சிலதினங்களின்பின்புசரக்குக் கப்பல் ஒன்றில் ஏற்றப்பட்ட நாம் "சரக்கு" ஆன நிலையில் தென்னிலங்கையிலுள்ள காலி பூஸா முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டோம்.

அங்கு நாம் வரவேற்கப்பட்ட முறையானது மிகமிகக் கேவலமானது. ஒரே அறைக்குள் பலரை ஒன்றாகவைத்துப் பூட்டப்பட்டோம். அடிகளும், உதைகளும் சர்வசாதாரணம்.

எங்களது நகங்கள் பிடுங்கப்பட்டன. ஊசியால் உடம்பில் துளையிடப்பட்டன. எமது உடல் சிகரெட் நெருப்பினால் சுடப்பட்டது. கயிற்றால்கட்டப்பட்டு தலைகீழாக தொங்கவிடப்பட்டோம். எரியும்வெய்யிலில் பலமணிநேரங்கள் நிறுத்திவைக்கப்பட்டோம்.

போதுமான உணவு கொடுக்கப்படுவதில்லை, குடிப்பதற்கு நீர்இல்லை. மாற்று உடுப்பு எதுவும் இல்லை குளிப்பதற்கான வசதிகள் இல்லை. குளிப்பதற்கான உத்தரவு எம்மால் கோரப்பட்டபொழுது துர்நாற்றம்வீசும் சாக்கடையில் தள்ளப்பட்டு வேடிக்கைப் பொருளானோம். இரவு நேரங்களில் பலர் நித்திரை கொள்வது ஒரே அறைக்குள் தான் இரவு நேரங்களில் நாம்சிறுநீர் கழிக்க வேண்டுமெனில் தண்ணீர் பருகும் எமதுபாத்திரங்களிலேயே கழிக்கவேண்டும்.

இவ்வாறு பூஸாவின் அவலங்களை அந்த இளைஞர் அடுக்கிக்கொண்டு போகிறார்.

அந்த அவலச் செயல்களைசித்தரிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இசைகவிதைவடிவிலான வர்ணனை உரை எம்மை பூஸா முகாமுக்கே அழைத்துச் செல்லுமாப்போல் அமைந்துள்ளது.

அமைச்சர்களால் அஸ்வமேத யாகத்தில் வைக்கப்பட்ட வேள்வி அல்ல இது. மாறாக அடக்கப்பட்ட மக்கள் அந்த அடக்குமுறையை உடைத்தெறிய ஏற்றப்பட்ட மேள்வி என்ற வரைவிலக்கணத்துடன் அமைந்துள்ளது "வேள்வி" என்னும் இந்த விவரணப் படம்.

## சிறைக்கைதிகள்

கொழும்பு ஞாயிறு

நாட்டிலுள்ள விளக்க மறியற்சாலைகள் அனைத்தும் கைதிகளால் நிரம்பியுள்ளன சுமார் ஆயிரம் பேர் இருக்கவேண்டிய சிறைச்சாலையொன்றில் எண்ணாயிரம்பேர் உள்ளனர். இதனால் உறங்கக்கூட முடியாமல், நின்றே இரவைக் கழிக்க வேண்டிய துர்ப்பாக்கியநிலை கைதிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

மேற்படி தகவல்களை சட்ட உதவி ஆணைக்குழு அறிக்கையொன்றில் வெளியிட்டுள்ளது.

## நிதி ஒதுக்கீடு

பண்டத்தரிப்பு ஞாயிறு

யாழ் மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலுமுள்ள அரசினர் வைத்திய சாலைகளுக்கு எதிர்வரும் 1987ம் ஆண்டில் மருந்துவகைகளுக்காக ஏழு இலட்சத்து எண்பத்தாறாயிரம் ரூபாவை சுகாதார திணைக்களம் ஒதுக்கீடு செய்துள்ளது.

## அதிசய பசுக்கன்று

வேலணை, ஞாயிறு

மூன்று கண்களும், இரண்டு மூக்கும் இரண்டு நாக்கும் உள்ள அதிசயப் பசுக்கன்று ஒன்றை வேலணை தெற்கு துறையூரில் உள்ள திரு. எஸ் சரவணை என்பவருக்குச் சொந்தமான பசு ஈன்றுள்ளது.

## இன்றைய பலன்

மாதம்- புரட்டாதி
கிழமை- திங்கள்
திகதி- 27 (13-10-1985)
திதி- ஏகாதசி பி இ. வரை
நஷத்திரம்- அவிட்டம் பி. இ. வரை

மேடம்- தூக்கம் இமைகளைத் தழுவ மறுக்கும். இதயப்படுதாவில் இளமை நினைவுகள் மீண்டும் தலைதூக்கும். ஆனந்தமும் ஆத்திரமும் கலந்த நிலையில அவதிப்படுவர்

இடபம்- பொன்னான சந்தர்ப்பம் இன்று கிடைக்கும். திறமைக்கு முதலிடமுண்டு பெரியவர்களின் ஆதரவு கிடைக்கும். இதயசுமையும் அகலும்

மிதுனம்- இனத்தவர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். நீண்டநாள் மனக்குறை நிவர்த்தியாகும் சுபதினம்

கடகம்- சிந்தனைகளின் தாக்குதலால் வேதனைப்படுவீர்கள் குழந்தையொன்றின் உடல் நலம் பாதிக்கப்படலாம். வைத்தியச் செலவுக்கும் இடமுண்டு.

சிங்கம்- குளுமையான சம்பவங்கள் இடம்பெறும். வாழ்க்கையில் பசுமை தோன்றும். ஸ்திரீவழியால் இலாபமும கிடைக்கும்.

கன்னி- துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும். சிறிய தலையிடிக்கும் இடமுண்டு. இன்று அமைதி நன்று

துலாம்- இலட்சியவாதிகளுக்கு சிறப்பான தினம் புண்ணிய விருப்புக்கும் இடமுண்டு பிதாவழிச் சுகக்குறைவும் ஏற்படும்.

விருச்சிகம்- கற்றதனால் பயன் இன்று கிடைக்கும் நுட்பமான வேலைகளில் ஈடுபடுவோர் போற்றப்படுவார்கள்.

தனுசு- மக்கள்மூலம் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம் பெறும் உள்ளத்திலும்உவகை துள்ளும்.

மகரம்- அவசரம் வேண்டும். ஆயுத பீடைக்கும் இடமுண்டு நில், நிதானி, அமைதி உன் காலடியில்.

கும்பம்- சிறுவிடயங்கள்கூட அதிக ஆத்திரத்தைத் தரலாம் வீணான சந்தேகங்களும் தோன்றககூடும். சிந்தித்துச் செயல்படவும்.

மீனம்- பிறருக்கு உதவுவதில் முன்நிற்பீர்கள். இதன் மூலம் பல செலவாகும். பொதுப்பணிகளில் ஈடுபடுவோர்களுக்கு அதிர்ஷ்டதினம்.

திருமலை
க. வே. ரவீந்திரன்


# WANTED

INSTRUCTOR IN FOUNDRY PRACTICE

Candidate should have a recognised diploma or equivalent qualification and minimum two years of practical experience in Foundry Industry apply immediately to Director, Jaffna College Technical Institute, Vaddukoddai.

Salary negotiable.

DIRECTOR

[A 1452]

## பிரயாண ஒழுங்குகள்

குவைத்:

எல்லாவித தரங்களுக்கும் உடன் வெற்றிடங்கள் உண்டு போகவிரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

மற்றும் பாஸ்போட், ரிக்கற், பொண்ட், விஸா ஆகிய ஒழுங்குகளும் செய்து கொடுக்கப் படும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

"SUPERB RANK"

PALALY ROAD, THIRUNELVELY
JAFFNA. C 5171

## பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க், கனடா ஆகிய நாடுகளுக்கு ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் எமது முகவர் உங்களை அழைத்துச் செல்வார் போகிறவர்கள் உடனடியாக எமது காரியாலயத்தில் தொடர்புகொள்ளவும்.

அத்துடன்,

ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கும் விசாவுடன பிரயாண ஒழுங்கு செய்து தரப்படும்.

சிங்கப்பூரில் — பணிப்பெண்கள்
Housemaid, Railway underground general workers இவற்றுக்கான வருமான வாய்ப்புக்கள் 21 நாளில் செய்து கொடுக்கப்படும்.

சவுதி, குவைற்-கிளினர். ஹவுஸ்
இவற்றுக்கான வருமான வாய்ப்புக்கள் உடன் செய்து கொடுக்கப்படும்.

GROUP ATLANTIC

அடைக்கலமாதா கோவில் பின்பக்கம்
163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

[A 1390]

## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ ஜேர்மனி
★ குவைத் ★ சவூதிஅரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் சென்ற வார பயணங்களை வெற்றிகரமாக நடாத்தி முடித்துள்ளார் இதுவரை எமது பல பயணங்கள் வெற்றிகரமாகவும், விரைவாகவும் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனிக்கு செல்ல விரும்பும் பெண்கள் (குறிப்பாக மணம் செய்தவர்கள், மணம் செய்யவிருப்பவர்கள்) உங்களை எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார். 19-ம் திகதிக்கு முன் பயணம் செய்ய உள்ளோம்.

குவைத்தில் Airport Cleaners (ஏயார் போட் கிளீனேர்ஸ்) ஆக வேலை பார்க்க விரும்புபவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். செல்ல விரும்புபவர்கள நேரடியாக பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

சவூதி அரேபியாவிற்கு வீதி அமைப்பு வேலைக்கு பிரயாண ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். விரைவாக அனுப்பிவைக்கப்படுவார்கள். உடன் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும்.


தொடர்பு:-
N. Bala

பஸ் இல. 764, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு.
திருச்செல்வம் வீதி, கோண்டாவில் கிழக்கு.

★ உங்கள் நன்மை கருதி தீவுப்பகுதியில் ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் என்னும் பெயரில் வங்களாவடிச் சந்தியில் அமைந்துள்ளது.

★ குப்பிளான் சந்திக்கு அருகாமையிலும் ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

[A-1395]



யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் இரண்டு மாடிக்கட்டிடத்தின் அழகிய தோற்றத்தைக் காண்கிறீர்கள். இதன் முதலாவது மாடி சமீபத்தில் மகேஸ்வரன் வெற்றிவேல் ஸ்தாபனத்தாரால் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது 2-வது மாடி அடுத்த மாதத்தில் ஒப்படைக்கப்பட உள்ளது.

## பூரண சந்திர கிரகணம்

[கொழும்பு]

பூரணச் சந்திர கிரகணம் ஒன்று வரும் 17-ம் திகதி இரவு இடம் பெறும். அன்று மாலை 5-50 மணிக்கு ஆரம்பமாகும் கிரகணம் அடுத்த நாள் அதிகாலை 3 46 மணிக்கு விடும். இரவு 12-11 முதல் 1-25 வரை பூரணக் கிரகணம் தென்படும்.

இலங்கையில் சகல பாகங்களிலும் இக்கிரகணத்தைப் பார்க்கலாம் என வானிலை ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது. [ஆ]




ஒரு பிரபல கல்லூரி நூலகத்தின் நூல் சேர்க்கை மிகவும் பிரமாதமாக இருந்தது. மூலை ஒன்றில் எவரும் கவனிப்பாரற்ற நிலையில் ஒரு புத்தகம் நடு ஒற்றைகள் கிழிக்கப்பட்ட நிலையில் எறியப்பட்டிருந்தது

எடுத்துப் பார்த்தால் இலங்கையைப்பற்றி குவைரோஸ் சுவாமியார் எழுதிய கிடைக்கமுடியாத மிக அருமையான புத்தகம்.

எப்படி இருக்கிறது எமது நாட்டின் நூலகக் கல்வி சட்டை போட்டு உடலின்றியிருக்கும் சத்துமிகு புத்தகங்கள்.

- பாணபத்திரன்

## உற்பத்திப் பொருட்களினால் சூழல் மாசடையாது பாதுகாக்கவேண்டும்

உடுவில் ஞாயிறு

"கைத்தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளில்கைத்தொழிலுக்கான கழிவுப் பொருட்கள் கடலுடன் கலப்பதனால் நீர் மாசடைகின்றது. இவ்வாறு சூழல் மாசடைவதனை அந்நாடுகள் சட்டங்களை இயற்றி ஓரளவு கட்டுப்படுத்தியுள்ளன"

சர்வதேச வதிப்பிட தினத்தை நினைவு கூரும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கில் உரையாற்றிய யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி கிருபாமூர்த்தி இவ்வாறு கூறினார்.

இக் கருத்தரங்கு உடுவில் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது. உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் இக்கருத்தரங்கிற்குத் தலைமை வகித்தார்.

கலாநிதி கிருபாமூர்த்தி தொடர்ந்து பேசுகையில் நாம் உற்பத்தி செய்யும் பொருட்களையோ பாவனைக்கு கொண்டு வரும் பொருட்களையோ சூழல் மாசடையா வண்ணம் பாதுகாப்புடன்செய்வது அவசியம்"

யாழ். மாவட்ட விவசாய உதவிப்பணிப்பாளர் திரு.எஸ் கிருஷ்ணபிள்ளை பேசுகையில் "காடுகளை அழிக்கும் திட்டத்தைக் கைவிட்டு, யாழ்ப்பாணத்தில் மணல்காடு என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள காடுகளைப்போல குடாநாடு முழுவதும் காடுகள் வளர்ப்புச் செய்யப்படவேண்டும்" என்றார்.

கருத்தரங்கினை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு அன்ரன் அல்பிரட் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார்.

சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தெய்வேந்திரன். யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் டாக்டர் சிவயோகம் ஆகியோரும் கருத்தரங்கில் உரையாற்றினர். (வா)


## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ கனடா

செல்லவிருக்கும் குறூப்பில் சேரவிரும்புபவர்கள் உடன் கடவுச் சீட்டுடன் தொடர்புகொள்ளவும்.

அத்துடன்

★ பிரான்ஸ் ★ இத்தாலி

ஆகிய நாடுகளுக்கு எமது பிரதிநிதி அழைத்துச் செல்லவுள்ளார்.

தொடர்புகொள்ளவும்:

லிப்ருஸ் லிமிட்ரெட்,

R. G. பில்டிங்,

70, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(A-1397)



## எமது புதிய வெளியீடுகள்

1. சுரேஷ் ஜீவிதா கவுண்டமணி
   எங்கள் தாய்க்குலமே வருக (PYRAMID ORIGINAL)
2. சிவாஜி சாவித்திரி கண்ணாம்பாள்
   அன்னையின் ஆணை (PYRAMID MASTER)
3. கவுண்டமணி இளவரசி செந்தில்
   ஒரு நல்லவன் ஒரு வல்லவன் (PYRAMID MASTER)
4. கார்த்திக் ஊர்வசி செந்தில்
   தொடரும் உறவுகள் (CAMERA COPY)
5. சரத்பாபு சில்க்சுமிதா செந்தில்
   கைதி ராணி (V. G P. MASTER)
6. கிருஷ்ணா ஸ்ரீதேவி மனோகர்
   புயல் (PYRAMID MASTER)
7. புதிய நட்சத்திரங்கள் நடித்த
   எங்களையும் வாழவிடுங்கள் (CAMERA COPY)
8. கமல் ராதிகா தீபா
   சிப்பிக்குள் முத்து (CAMERA COPY)
9. சந்திரமோகன் ராதா சில்க்
   கைதியின் நீதி [CAMERA COPY)
10. War Film; "TOUGH TO KILL"

குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி; 23665 (A 1398)



## பிரயாண ஒழுங்குகள்

அவசர தேவை

★ சவுதி அரேபியா ★ லிபியா

ஹெவி வெயிக்கிள் பஸ் றைவேஸ்.

5 வருட அனுபவத்துடன்: வயது: 25-44 வரை

★ ஸ்கூல் கிளீனேஸ்: 100 பேர்

★ பஸ் கிளீனிங் லேபறேஸ்: 100 பேர்

ஒரு வாரத்தினுள் பிரயாணம் செய்யலாம்: உடன் பாஸ்போட், 20 படம், மற்றும் லைசென்ஸ் முதலிய ஆவணங்களுடன் நேரில் வரவும்;

டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதர்

பிரசாந்தி வைத்திய நிலையம்,

கற்பகப்பிள்ளையார் கோவிலடி,

உடுவில் கிழக்கு, உடுவில்.

பி: கு: இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள ஒழுங்கையால் வரவும். [A 1394]


## "இளைஞர்கள் புத்தகமும் ஏந்தவேண்டும்"

யாழ்ப்பாணம், திங்கள்

"இன்றைய காலகட்டத்தில் கல்வி கற்பதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. எமது இளஞ்சந்ததியினர் ஒருகையில் ஆயுதம் ஏந்தும் அதேவேளையில் மறுகையில் புத்தகத்தையும் ஏந்தவேண்டும்."

இருபாலை கிழக்கு சனசமூக நிலையமும், மாதர் சங்கமும் இணைந்து நடாத்திய வாணி விழாவில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபரும், வலி-கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவருமான திரு செ. சபாரத்தினம் இவ்வாறு தெரிவித்தார்.

திரு எஸ். அழகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கவியரங்கு, பட்டிமன்றம், நாடகம், சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகள் என்பனவும் சிறப்பாக நடைபெற்றன. [ச-வா]


## புனித இயக்கங்கட்கு பணிவான வேண்டுகோள்

வவனியா G. H. De Silva நிறுவனத்தின் உரிமையாளரும் பிரபல வர்த்தகரும் எனது கணவருமான திரு சிவபாதசுந்தரம் திருஞானசம்பந்தர் அவர்களை கடந்த 9ம் திகதி வியாழக்கிழமை இரவு 10 மணியளவில் ஹொரவப்பொத்தானை வீதியிலுள்ள எனது வீட்டுக்கு வந்த இளைஞர் கோஷ்டியொன்று நித்திரையில் இருந்த அவரை எழுப்பி [இயக்கத்தின் பெயரால்] மறுநாட்காலை கொண்டு வந்து விடுவதாகக் கூறி அழைத்துச் சென்றனர் ஆனால் இன்றுவரை எனது கணவர் திரும்பிவரவில்லை. அவர் இருக்குமிடம்தொடர்பான தகவலும் தெரியவில்லை என் மீதும் எமது ஒரே குழந்தை மீதும் தயைவுகூர்ந்து அவரை நிபந்தனையின்றி விடுவிக்குமாறு புனித இயக்கங்களை வேண்டிக் கொள்கின்றேன்.

அன்பு மனைவி,

குழந்தை அமரநாத்தும்.

A 1457



## பிரயாண ஒழுங்குகள்

# அவசர தேவை

★ சவூதி அரேபியா ★ லிபியா

(ஹெவி வெயிக்கிள் பஸ் றைவேஸ்)

5 வருட அனுபவத்துடன்

வயது 25 — 44 வரை.

ஸ்கூல் கிளீனேஸ்: 100 பேர்

பஸ் கிளீனிங் லேபறேஸ்: 100 பேர்

ஒரு வாரத்தினுள் பிரயாணம் செய்யலாம்.

உடன் பாஸ்போட், 20 படம்

மற்றும்

லைசென்ஸ் முதலிய ஆவணங்களுடன் நேரில் வரவும்.

யூனிவேசல் ஏஜென்சி

125, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(பெற்றோலியம் கூட்டுத்தாபனத்துக்கு முன்பாக, ஆயுர்வேத கல்லூரி அருகாமையில்)

(A 1393)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
திங்கட்கிழமை 13-10-86

### பருத்தித்துறையில்

# ஷெல் தாக்குதலுக்கு 9 மாத கர்ப்பிணி பலி

பருத்தித்துறை, ஞாயிறு
பருத்தித்துறைகூட்டுப்படை முகாமிலிருந்து இராணுவத்தினரால் ஏவப்படட மோட்டர் ஷெல்லுக்கு 9 மாதக் கற்பிணி ஒருவர் பலியானுர். நேற்று சனிக்கிழமை நடைபெற்ற இத்தாக்குதலின்போது இருஇளைஞர்களும் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் பருத்தித்துறையில் மோட்டர் ஷெல் தாக்குதல்கள் பயங்கரமாக காலை தொடக்சம் இடம் பெற்றன. சீ பிளேன், ஹெலிகொப்டர்களும் பருத்தித்துறையில் பலதடவைகள் வட்ட மிட்டன.

மோட்டர் ஷெல் தாக்குதல்களின்போது பட்டியோடை (அல்வாய்) கிராமத்தைச் சேர்ந்த கர்ப்பிணியான திருமதி செ. நளினி (வயது 16) காயமடைந்து வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு மரணமானுர்.

இதேவேளை. கடந்த வெள்ளிக்கிழமை சுப்பர் மடத்தைச் சேர்ந்த எஸ். செபஸ்திடாம்பிள்ளை (வயது 24) என்பவரும் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியானுர். (ஊ)

### கொழும்பு---

(1ம் பக்க தொடர்ச்சி)

துள்ளது. இச்சேவையை தினசரி நடாத்தவும் இந்நிறுவனம் முன்வந்துள்ளது.

ஆனும் நாட்டின் தற்போதைய நிலையைக்கருத்தில் கொண்டே இச் சேவைக்கு அனுமதி வழங்கப்படும் என தேசிய பந்தோபஸ்து அமைச்சு அறிவித்துள்ளதாக பந்தோபஸ்து அமைச்சுவட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது இவ் விஷயத்தை இந்திய அதிகாரிகளுடனும் கலந்தாலோசிக்குமாறு அமைச்சு இந்நிறுவனத்துக்கு பணித்துள்ளதாகவும் இவ்வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. (ஊ)

### விபத்தில் இளைஞர் பலி

பருத்தித்துறை ஞாயிறு
மோட்டார் சைக்கிளொன்றில் மூவர் பயணம் செய்து கொண்டிருந்தபோது மினிவானுடன் மோதியதில் ஒரு இளைஞர் பலியானுர். ஏனைய இரு இளைஞர்களும் மயிரிழையில் உயிர்தப்பினர். இச் சம்பவம் கடந்த செவ்வாயன்று நடந்தது.

இந்த விபத்தின்போது பலியானவர் தென்புலோலி குருபைக்கட்டியைச் சேர்ந்த மயில்வாகனம் பாலேந்திரன் (வயது 20) என்ற திருமணமாகாத இளைஞராவர்.

### அடுத்தாண்டு பட்ஜட்:

# கல்வி நிதியில் வெட்டு

### பாதுகாப்புக்கு கூடுதல் ஒதுக்கீடு

கொழும்பு. ஞாயிறு
அடுத்தாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் உயர் கல்விஅமைச்சுக்கான நிதிஒதுக்கீடு பெருமளவில் குறைக்கப்படுமெனத் தெரியவருகிறது. பாதுகாபபு அமைச்சுக்கு அதிகளவு பணம் ஒதுக்கப்படுவதே இதற்கான காரணம்.

உயர் கல்வி அமைச்சு கோரியநிதியில்இரண்டிலொரு பங்கே அதற்கு வழங்கப்படவுள்ளது.

இந்தநிதி குறைப்பினுல் உயர்கல்வி அமைச்சின் செயற்பாடுகள், குறிப்பாக பல்கலைக்கழக மட்டத்திலான செயற்பாடுகள் பாதிக்கப்படவுள்ளன என அஞ்சப்படுகிறது.

இதேவேளை நீதியமைச்சர் திரு ஷெனி டிமெல் வெளிநாட்டு நிதி உதவி பெறுவதில் மேற்கொண்ட முயற்சிகள் எதிர்பார்த்தளவு வெற்றியளிக்கவில்லை எனவும் அறியப்படுகின்றது. (ஊ)

### தொல்புர விவசாயநிலையக் கொள்ளை:

## ஊழியரை பேராதனை வருமாறு பணிப்பு

பண்டத்தரிப்பு. ஞாயிறு
தொல்புரம் விவசாய விரிவாக்க நிலையத்தில் கடந்த ஆண்டில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம்பற்றிய நேர்முக விசாரணை கண்டியிலுள்ள பேராதனை விவசாய திணைக்கள அலுவலகத்தில் நடைபெறுமென்றும், அதற்குச் சமூகமளிக்குமாறும் விவசாய அமைச்சு தொல்புரம் விவசாய விரிவாக்க நிலயத்தில் கடமையாற்றும் மூன்று ஊழியர்களுக்கு அறிவித்தல்களை அனுப்பி வைத்துள்ளது.

தொல்புரம் விவசாய விரிவாக்க நிலயத்தில் கிருமிநாசினி தெளி கருவிகள், தராசுகள், சாக்குகள் போன்ற பல பொருட்கள் கடந்த ஆண்டில் இனந் தெரியாதவர்களினுல் கொள்ளையடிக்கப் பட்டிருந்தன. இக்கொள்ளைச் சம்பவம் பற்றிய நேர்முக விசாரணைக்கே கண்டிக்குவரும்படி பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

பேராதனை விவசாய திணைக்கள அலுவலகத்தில் நடைபெறவுள்ள இவ்விசாரணைகு சமூகமளிக்குமாறும், தொல்புரம் விவசாயப் போதனுசிரியர் உட்பட மற்றும் இரு ஊழியர்களுக்கு அறிவித்தல்களை விவசாய அமைச்சு அண்மையில் அனுப்பிவைத்துள்ளது. (ஊ)

### மாடுகள் வழங்கப்பட்டன

புங்குடுதீவு, ஞாயிறு
சின்னப்பணடி விர்ச்சஸ் மாதர் பணியகத்திற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 15 000 ரூபா பெறுமதியான மாடுகள் 10 யுவதிகளுக்கு மன்னுர் மாவட்ட அரசாங்க அதிபர் எம். எம் மக்பூல் அவர்களினுல் கடந்த மாதம் 14ந் திகதி வழங்கப்பட்டன.

### நூல்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், திங்கள்
அமரர் ச. சூரசங்காரனின் 14வது சிரார்த்த தினத்தையொட்டி யாழ். போதனு வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச்சங்கத்திற்கு சமய சார்பந்தமான நூல்களும், சஞ்சிகைகளும் திருமதி க. சூரசங்காரன் வழங்கியுள்ளார். (வா)

### "வவனியா பகுதியில் கிராமோதய சபைகள்

# சிறந்த சேவை"

### அரச அதிபர் உரை

வவனியா. ஞாயிறு
'வவனியாவில் விவசாயவிஸ்தரிப்பு சேவைகளும் கமநல சேவைநிலையங்களும் சிறப்புற போட்டி போட்டு சேவையாற்றுகின்றனஅதுமட்டுமல்லாம் மாவட்டத்தில் பல் வேறுவிதமான நெருக்கடியான காலகட்டத்தில் இருந்த போதும் ஏனைய மாவட்டங்களைவிட சில முக்கியவிடயங்களில் முற்போக்காகவுள்ளது'.

இவ்வாறு பண்டாரிகுளத்தில் ஏர்பூட்டுவிழாவினை முன்னிட்டு நடைபெற்ற கூட்டத்தில் பிரதமவிருந்தினராக கலந்துகொண்டு பேசுகையில் வவனியா அரசஅதிபர் திரு. கே. ஸி. லோகேஸ்வரன் தெரிவித்தார்.

கோவில்குளம் கமநல சேவைகள் குழுத் தலைவர் திரு வீ கே. இரத்தினசிங்கம் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

அரசஅதிபர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

"கடந்த ஆண்டு இம்மாவட்டத்திலிருந்து சுமார் 25 ஆயிரம் பேர் குடிபெயர்ந்து வேறு மாவட்டங்களுக்கு சென்றனர். இதில் 3600 குடும்பங்கள் தற்போது மீளவும் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள் இந்த காலபோகவேளாண்மையினை சரியாக நடாத்த அரச இலாகாக்களும் மக்கள் நிறுவனங்களும் முன்வந்துள்ளன

"மக்கள் நிறுவனங்களுக்கு கொடுக்கப்பட்ட கடமைகள் சரிவர செய்யப்பட்டுள்ளன இவ் விடயத்தில் வவனியா பகுதியில் உள்ள கிராமோதய சபைகள் இக் கால சட்டத்தில் சிறந்த பணியாற்றியுள்ளன.

'அகதிகள் மீள குடியமர்த்தல் போன்ற விடயங்களில் கூட்டுறவு சங்கங்கள் உதவியுள்ளன.

கோவில் குளம் பகுதி விவசாயப் போதனுசிரியர் திரு. ரி. கணேசலிங்கம், விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு என். நந்த கோபாலன் ஆகியோர்இந்த வைபவத்தினை ஏற்பாடு செய்திருந்தனர்.

வைபவத்தில் சகல இலாகா தலைவர்களும் விவசாய பெருமக்களும் கலந்து சிறப்பித்தனர். திட்டப்பணிப்பாளர் திரு ரி. இலங்காநேசன், கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு எஸ். தில்லை நடராஜா, கமநல சேவை உதவுப் பணிப்பாளர் திரு ஏ. சுந்தரலிங்கம், விவசாய விஸ்தரிப்பு பிரிவு உதவிப் பணிப்பாளர் திரு ஏ. கிருஸ்ணர் ஆகியோரும் பேசினுர்கள்.

### புதிய மின்மாற்றி சாதனம்

பண்டத்தரிப்பு ஞாயிறு
நீண்ட காலமாக எதிர்பார்த்திருந்த சில்லாலை உப மின் நிலையத்திறகான மின்மாற்றி சாதனம் அனுராதபுரத்திலிருந்து கொண்டுவரப்பட்டு பொருத்தப்பட்டுள்ளது இந்த உப மின் நிலையம் இயங்க ஆரம்பிக்குமென்று பண்டத்தரிப்பு பட்டின அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு எஸ். ரி. கதிரவேலுப்பிள்ளை தெரிவித்தார். (வா)

### 25 புதிய மின்சேவைதொடர்பு

பருத்தித்துறை ஞாயிறு
யாழ். அபிவிருத்திச் சபை நெல்லியடி உப-அலுவலகப் பகுதியில் சட்டவிரோத மின் பாவனை. கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த ஒரு மாத காலத்தில் கிட்டத்தட்ட 25 புதிய மின்சேவைத் தொடர்புகள் வழங்கப்பட்டுள்ளன. சில உபகரணங்கள் தட்டுப்பாட்டால் மின்விஸ்தரிப்பு நடவடிக்கைகளை முழுமையாகமேற்கொள்ளமுடியாமல் இருக்கின்றது.

இவ்வாறு யாழ். அபிவிருத்திச்சபை நெல்லியடி உப-அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. கே. சுப்பிரமணியக் குருக்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை கந்தையா

காரைநகர் புதுரோட் கணபதிப்பிள்ளை கந்தையா காலமானுர் இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சின்னத்தங்கம் தம்பதிகளின் புதல்வனும் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், செல்வராசா [A G. A. அலுவலகம், நெடுங்கேணி], இராஜரட்ணம் (U. K), துரைராஜா, சரஸ்வதி, ஜெயசோதி (Brunie) ஆகியோரின் தகப்பனுரும், தர்மபாலன், ஜெயேந்திரன் (Brunie), பாக்கியலட்சுமி, செல்வமலர் (U K), இராசேஸ்வரி ஆகியோரின் மாமனுரும் லோகேந்திரன், இராஜேந்திரன் விமலராஜன், விமலரூபன், விமலநாதன், சாந்தி (U K), சிவா (U. K), ரோகிணி, ஜெயசீலன் Burnie) சற்குணராசா ஆகியோரின் பேரனுமாவார். இவரின் ஈமக்கிரியைகள் 13-10-86 இன்று பிற்பகல் 2-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும் நண்பர்கள், உறவினர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இன்ரநாஷனல் கொம்மினிகேஷன் கொம்பிளெக்ஸ்,
மானிப்பாய்.

(A 1459)

### டெய்சி இராசேந்திரம்

டெய்சி - இராசேந்திரம் காலமானுர். இவர் காலஞ்சென்ற யோசேப், எலிசம்மாவின் மகளும, தம்பித்துரை இராசேந்திரம் இளைப்பாறிய இலிகிதர் (தொழில திணைக்களம், கொழும்பு), அவர்களின் அன்பு மனைவியும் ருஜன். (ஜேர்மனி), றதனி யூட் (ஜேர்மனி), சுவந்தினி சாமினி (திருக்குடும்பக் கனனியர் மடம்], ஆகியோரின் தாயாரும், மரியசீலன். (இலங்கை மின்சாரசபை, வேலணை), அன்பு மாமியாரும், தவமணி லீயோ, டேவிட் (தபால்அதிபர்), அருளானந்தம், றிச்சேட், அல்பிறேட் (வர்த்தகர், கொழும்பு]. யேசுதாசன் (கட்டிடத் திணைக்களம், மன்னுர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற அருமைத்துரை றீற்றா, இரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னுரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இல: 8, இராசாவின் தோட்டம் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில் இருந்து புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு புதன்கிழமை 15-10-86 அன்று காலை எடுத்துச் செல்லப்படும்.

தகவல் J. யேசுதாசன்.
[5181]

### திருமதி நாகமுத்து பத்தியநாதர்

திருமதி நாகமுத்து பத்தியநாதர் காலமானுர். இவர் காலஞ்சென்ற மலாயன் பென்ஷனரும், மயிலிட்டி தெற்கு கிராம சேவையாளருமாகிய பத்தியநாதரின் அருமை மனைவியும், சிவபாதசுந்தரம் [பொறியியலாளர், கட்டிடப்பகுதி], காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் [டாக்டர்], பாலசௌந்தரி, பாலசரஸ்வதி, பாலராணி ஆகியோரின் அருமைத்தாயாரும், சிவகாமசுந்தரி, பரமேஸ்வரி. இராமநாதன் [சமூகசேவைகள் உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்], ஸ்ரீசண்முகநாதன் [டாக்டர்], சரவணபவான் [கணக்காளர், நைஜீரியா), ஆகியோரின் அருமைமாமியுமாவார். அன்னுரின் பூதவுடல் திங்கட்கிழமை [இன்று) 13-10-1986 மாலை 4-00 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் உற்றுரும், உறவினரும், இத்தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

தகவல்: அ. இராமநாதன்
18/4, சீனியர் லேன்,
கலட்டி, யாழ்ப்பாணம்.
[C 5188]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு அக்டோபர்மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O. Box 49. Telegram Eelanadu Telephone: 22389—24126